In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவாரப் பூங்கொத்து

தொண்டை நாட்டுத் தலங்கள்



பாகம் - 1 (20 தலங்கள்)

காஞ்சிபுரம் முதல் ஒற்றியூர்வரை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அருள்மிகு வடாரண்யேஸ்வரர் திருக்கோயில், திருவாலங்காடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவாரப் பூங்கொத்து
தொண்டை நாடு – பாகம் 1

(காஞ்சி முதல் ஒற்றியூர் வரை – 20 தலங்கள்)

மூவர் தேவாரமும் அறுபத்து மூவரும்

பெரிய புராணமாகிய *திருத்தொண்டர் புராணம்*, பக்தி மற்றும் ஆன்மிக முன்னேற்றத்திற்கு இன்றியமையாத நூலாக விளங்குகிறது. தமிழ் கூறும் நல்லுலகம் மட்டுமல்லாது 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கர்னாடக பசவன்னர் மற்றும் சமீப காலத்தில் வாழ்ந்த சுசுநால சரீபா என்ற இசுலாமியப் பெரியோர் ஆகியோரின் வாழ்வும் வாக்கும்கூட *பெரிய புராண* வரலாற்றினைக் குறிப்பிடுகின்றன. பட்டினத்தார், வள்ளலார், பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி போன்ற எண்ணிறந்த ஆன்மிகப் பெரியோர்கள் உருவாகவும் நாயன்மார்களின் வரலாறு உதவியுள்ளது. சமீபகாலத்தில் வெளியாகியுள்ள "மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்", "சேக்கிழார் அடிச்சுவட்டில்" நூல்களும் மற்றும் பற்பல தலயாத்திரை வழிகாட்டி நூல்களும் சிவபக்திப் பயிரை நன்கு வளர்த்து வருகின்றன.

ஒரு சிறு மரண அனுபவத்தின் மூலம் மதுரையில் ஆன்மிக உச்சநிலையை அடைந்த பகவான் ரமணர், மீனாட்சியம்மை ஆலய அறுபத்துமூவர் சந்நிதி முன்பு பக்திப்பரவசக் கண்ணீர் வடித்த நிகழ்ச்சியினை அவரது சரிதை நூல்கள் விவரிக்கின்றன. அதுவன்றியும் ரமணர், நாயன்மார்களின் வரலாற்றினை விரிவாக அன்பர்களுக்கு விளக்குவதும் மூவர் தேவாரங்களைப் பாட பக்தர்களை ஊக்குவிப்பதும் தேவார திருவாசகங்களிலுள்ள ஆழ்ந்த நுண்ணிய கருத்துக்களை வெளிப்படுத்துவதும் ஆகிய பற்பல நிகழ்ச்சிகளை ரமண பக்தர்கள் தங்களது அனுபவ நூல்களில் விளக்கியுள்ளனர்.

> A stanza in *Thevaram* says: "O sages, eager to get over all misery, worry not about inferences and examples! Our Light is ever shining forth from within! With mind clear, live in God!". . . . This *Thevaram* takes one directly to the Reality.
> (*Talks with Sri Ramana Maharshi*, Talk No. 512)

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்கவேண்டா சுடர் விட்டுளன் எங்கள்சோதி
. . . இறையே வந்து சார்மின்களே. (ஞானசம்பந்தர்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதுவன்றியும் திருப்போரூர் சந்நிதிமுறையிலுள்ள ஒரு பாடலை தேவராஜ முதலியார் என்ற அன்பர் "திருப்போரூரா! என்றே நான் ஈடேறுவேன்?" என்று பொதுவான கருத்துடன் பாட, பகவான் ரமணர் அவரிடம் "திருப்போரூரா என்றே, நான் ஈடேறுவேன்" (அதாவது திருப்போரூரா என உச்சரித்துக்கொண்டே நான் ஈடேறுவேன்) என்ற கருத்தும் அப்பாடலில் உள்ளதை அவருக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுமார் எண்ணாயிரம் பாடல்களைக் கொண்ட தேவார, திருவாசகப் பாடல்களில் சிலவற்றை இலவச வெளியீடாக்க எண்ணி, திருவண்ணாமலை தேவார, திருவாசகப் பூங்கொத்து, திருவாசக நீத்தல் விண்ணப்பம், கொங்கு ஏழு தலங்களின் தேவாரங்கள், பாண்டி 14 தேவாரப் பூங்கொத்து ஆகிய நான்கு வெளியீடுகளை அடுத்து தொண்டை நாட்டுத் தேவாரப் பூங்கொத்து இருபகுதிகளாக தற்போது வெளியிடப்படுகிறது.

முதல் பாகம் காஞ்சி முதல் ஒற்றியூர் ஈறாக 20 தலப் பதிகங்களையும், இரண்டாம் பாகம் சென்னை-திருவலிதாயம் முதல் இரும்பை மாகாளம்வரை 12 தலங்கள் மற்றும் (நடுநாடு, காவிரி வடகரை மற்றும், தென்கரைகளில் அமைந்துள்ள) அட்ட வீரட்டத் தலங்களுமாக மொத்தம் 20 தலங்களின் பதிகங்களையும் கொண்டுள்ளது.

ஸ்ரீரமணாச்ரமம் மற்றும் ஸ்ரீமதி T.R. கனகம்மாள் நூற்றாண்டு (1922-2022) இலவச இறுதி வெளியீடு. இவ்வெளியீடுகளை ரமணீயம் என்ற YouTube சானலில் புத்தகம் மற்றும் ஒலிவடிவிலும் கேட்டும் தரவிறக்கம் செய்தும் பயனடையலாம்.

தலங்கள்	ஞா+அ+சு	பக்கம்		ஞா+அ+சு	பக்கம்
கச்சி ஏகம்பம்	4+7+1	3	திருமால்பூர்	2+4+-	36
கச்சி மேற்றளி	-+1+1	12	தக்கோலம்	1+-+-	41
ஓணகாந்தன்தளி	-+-+1	16	எலுமியங்கோட்டூர்	1+-+-	43
அனேகதங்காவதம்	1+-+1	18	திருவிற்கோலம்	1+-+-	47
காரைக்காடு	1+-+-	23	திருவாலங்காடு	1+2+1	49
குரங்கணில்முட்டம்	1+-+-	25	திருப்பாசூர்	1+2+-	60
மாகறல்	1+-+-	27	திருவெண்பாக்கம்	-+-+1	64
திருவோத்தூர் (செய்யார்)	1+-+-	30	திருக்கள்ளில்	1+-+-	66
வன்பார்த்தான் பனங்காட்டூர்	-+-+1	32	திருக்காளத்தி	2+1+1	68
திருவலம்	1+-+-	34	ஒற்றியூர்	1+5+2	75
ஞா = ஞானசம்பந்தர்; அ = அப்பர்; சு = சுந்தரர்					
மேற்கண்ட 53 பதிகங்களில் 32 பதிகங்கள் இந்நூலில் பதிப்பிக்கப்பெற்றுள்ளன					

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. கச்சி ஏகம்பம்

(சென்னை நகரிலிருந்து 70 கி.மீ., செங்கல்பட்டு – அரக்கோணம் இரயில் பாதை)

சைவசமய ஆதீனங்களுள் மிகப் பழமையான, மெய்கண்டதேவர் சந்தான பீடம் எனத் திகழ்கின்ற (தற்போதைய பட்டம் 232) தொண்டை மண்டல ஆதீனம் உள்ளது.

சுந்தரர் பதிகம்பாடி, இடக்கண் திரும்பப்பெற்ற இடம். காஞ்சியில் உள்ள அனைத்து சிவாலயங்களுக்கும் காமாட்சியம்மன் கோயில்தான் அம்பாள் சந்நிதி. சின்ன காஞ்சி வரதராஜர் தேர் உள்பட அனைத்துக் கோயில் உற்சவ மூர்த்திகளும் காமாட்சியம்மன் கோயில் மாடவீதிகளை வலம் வந்து செல்வர். மற்ற, தற்போதுள்ள சிவாலயங்களில் அம்பாள் உற்சவ மூர்த்தி மட்டுமே உள்ளது.

'நகரேஷு காஞ்சி' என முக்தி தரும் ஏழு தலங்களில் முக்கியமானதும் ஏகாம்பர-காமாட்சி ஆலயங்களுக்கு நடுவில் உள்ள குமரக் கோட்டமும் சேர்ந்து சோமாஸ்கந்த வடிவில் அமைந்துள்ளது.

கச்சியப்பரின் 'கந்தபுராண' அரங்கேற்றம் கந்தவேளே நேரில்வந்து நடைபெற்றது. எப்போதும் விழாக்கள் நடைபெறுவதால் 'விழாவறாக் காஞ்சி' எனப் புகழப்படுகிறது, கி.பி. 3-9 நூற்றாண்டுகளில் ஆட்சி செய்த பல்லவர்களின் தலைநகர் காஞ்சி. சீன யாத்ரீகர் யுவான் சுவாங் குறிப்பிலிருந்து கி.மு. 5-ஆம் நூற்றாண்டிற்கு முன்னிருந்தே காஞ்சிபுரம் சீரும்சிறப்புமாக இருந்த செய்தி உள்ளது.

நாயன்மார்களில் சாக்கியர், திருக்குறிப்புத் தொண்டர், ஐயடிகள் காடவர்கோன், பல வைணவ, ஜைனர்கள், அர்த்தசாஸ்திரம் எழுதிய சாணக்கியர், திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் போன்ற பற்பல பெரியோர்களைப் படைத்தது காஞ்சி. காஞ்சிபுராணம் மாதவ சிவஞானரால் இயற்றப்பட்டுள்ளது. ஆதிசங்கரரின் சர்வக்ஞ பீடம் எனும் காமகோடி பீடமடம் போன்ற அளவற்ற சிறப்புகளைக் கொண்டது காஞ்சி மாநகரம். பல்லவ மன்னன் ராஜசிம்மன் கயிலாயநாதர் ஆலயத்தைக் காஞ்சியில் நிறுவி, கும்பாபிஷேகத்திற்குக் குறித்த நாளில் இறைவன் பூசலாரின் (மனக்)கோயில் குடமுழுக்குக்குச் செல்வதாக மன்னனுக்குக் கனவில் அறிவித்தது போன்ற பற்பல பக்தி, ஞான வரலாறுகளையும் கொண்டது காஞ்சி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானசம்பந்தர் தேவாரம் 1.133 (மொத்தம் 43 பாடல்கள்)
(பண்: மேகராகக் குறிஞ்சி; ராகம்: நீலாம்பரி)

திருச்சிற்றம்பலம்

1. வெந்தவெண் பொடிப்பூசு(ம்) மார்பின்விரி நூல்ஒருபால் பொருந்தக்
கந்தமல்கு குழலியோடும் கடிபொழில் கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தார் அவர்போற்ற அணங்கினொடு ஆடல்புரி
எந்தை மேவிய ஏகம்பம்தொழு தேத்த இடர்கெடுமே.

2. வரந்திகழும் அவுணர் மாநகர்மூன் றுடன்மாய்ந் தவியச்
சரந்துரந் தெரிசெய்த தாழ்சடைச் சங்கரன் மேயஇடம்
குருந்தம் மல்லிகை கோங்குமா தவிநல்ல குராமரவந்
திருந்துபைம் பொழிற்கச்சி ஏகம்பம் சேர இடர்கெடுமே.

3. வண்ணவெண் பொடிப்பூசு மார்பின் வரியர வம்புனைந்து
பெண்ணமர்ந் தெரிஆடல் பேணிய பிஞ்ஞகன் மேயவிடம்
விண்ணமர் நெடுமாடம் ஓங்கி விளங்கிய கச்சிதன்னுள்
திண்ணமாம் பொழில்சூழ்ந்த ஏகம்பம் சேர இடர்கெடுமே.

4. தோலும்நூ லும்துதைந்த வரைமார்பில் சுடலைவெண் ணீறணிந்து
காலன்மாள் வுறக்காலால் காய்ந்த கடவுள் கருதுமிடம்
மாலைவெண் மதிதோயு(ம்) மாமதில் கச்சி மாநகருள்
ஏலம்நாறிய சோலைசூழ் ஏகம்பம் ஏத்த இடர்கெடுமே.

5. தோடணிம் மலர்க்கொன்றை சேர்சடைத் தூமதி யம்புனைந்து
பாடல்நான் மறையாகப் பல்கணப் பேய்கள் அவைசூழ
வாடல்வெண் டலையோ டனல்ஏந்தி மகிழ்ந்துடன் ஆடல்புரி
சேடர்சேர் கலிக்கச்சி ஏகம்பம் சேர இடர்கெடுமே.

6. சாகம்பொன் வரையாகத் தானவர் மும்மதில் சாயஎய்து
ஆகம்பெண் ணொருபாக மாக அரவொடு நூலணிந்து
மாகந்தோய் மணிமாட மாமதில் கச்சி மாநகருள்
ஏகம்பத் துறைஈசன் சேவடி யேத்த இடர்கெடுமே.

7ம் செய்யுள் கிடைக்கவில்லை

8. வாணிலா மதிபுல்கு செஞ்சடை வாளர வம்அணிந்து
நாணிடத் தினில்வாழ்க்கை பேணி நகுதலையிற் பலிதேர்ந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏணிலா அரக்கன்தன் நீள்முடி பத்தும் இறுத்தவன்ஊர்
சேணுலாம் பொழில்கச்சி ஏகம்பம் சேர இடர்கெடுமே.

9. பிரமனும் திருமாலும் கைதொழப் பேரழ லாயபெம்மான்
அரவம் சேர்சடை அந்தணன் அணங்கினொடு அமருமிடம்
கரவில்வண் கையினார்கள் வாழ்கலிக் கச்சி மாநகருள்
மரவம்சூழ் பொழில்ஏகம் பம்தொழ வல்வினை மாய்ந்தறுமே.

10. குண்டுபட்டு அமண் ஆயவரொடும் கூறைதம் மெய்போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை யவைகொண்டு விரும்பேன்மின்
விண்டவர் புரமூன்றும் வெங்கணை ஒன்றி னாலவியக்
கண்டவன் கலிக்கச்சி ஏகம்பம் காண இடர்கெடுமே.

11. ஏரினார் பொழில்சூழ்ந்த கச்சி ஏகம்பம் மேயவனை
காரினார் மணிமாடம் ஓங்கு கழுமல நன்னகருள்
பாரினார் தமிழ்ஞான சம்பந்தன் பரவிய பத்தும்வல்லார்
சீரினார் புகழ்ஓங்கி விண்ணவ ரோடும் சேர்பவரே.

திருச்சிற்றம்பலம்

அப்பர் தேவாரம் 4.007 (மொத்தம் 71 பாடல்கள்)
(பண் : காந்தாரம்; ராகம்: நவரோஸ்)

திருச்சிற்றம்பலம்

1. கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

2. தேனோக்கும் கிளிமழலை உமைகேள்வன் செழும்பவளம்
தானோக்கும் திருமேனி தழலுருவாம் சங்கரனை
வானோக்கும் வளர்மதிசேர் சடையானை வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

3. கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. அண்டமாய் ஆதியாய் அருமறையோ டைம்பூதப்
பிண்டமாய் உலகுக்கோர் பெய்பொருளாம் பிஞ்ஞகனைத்
தொண்டர்தாம் மலர்தூவிச் சொன்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையானை என்மனத்தே வைத்தேனே.

5. ஆறேறு சடையானை ஆயிரம்பே ரம்மானைப்
பாறேறு படுதலையில் பலிகொள்ளும் பரம்பரனை
நீறேறு திருமேனி நின்மலனை நெடுந்தூவி
ஏறேறும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

6. தேசனைத் தேசங்கள் தொழநின்ற திருமாலால்
பூசனைப் பூசனைகள் உகப்பானைப் பூவின்கண்
வாசனை மலைநிலம்நீர் தீவளி ஆகாசமாம்
ஈசனை எம்மானை என்மனத்தே வைத்தேனே.

7. நல்லானை நல்லான நான்மறையோ டாறங்கம்
வல்லானை வல்லார்கள் மனத்துறையும் மைந்தனைச்
சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானைத் துகளேதும்
இல்லானை எம்மானை என்மனத்தே வைத்தேனே.

8. விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்
புரித்தானைப் பதம்சந்திப் பொருளுருவாம் புண்ணியனை
தரித்தானைக் கங்கைநீர் தாழ்சடைமேல் மதில்மூன்றும்
எரித்தானை எம்மானை என்மனத்தே வைத்தேனே.

9. ஆகம்பத் தரவணையான் அயன்அறிதற் கரியானைப்
பாகம்பெண் ணாண்பாக மாய்நின்ற பசுபதியை
மாகம்ப மறையோதும் இறையானை மதில்கச்சி
ஏகம்ப மேயானை என்மனத்தே வைத்தேனே.

10. அடுத்தானை உரித்தானை அருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை என்மனத்தே வைத்தேனே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுந்தரர் தேவாரம் 7.061 (பண் : தக்கேசி; ராகம்: காம்போதி)

திருச்சிற்றம்பலம்

1. *ஆலந் தான்உகந்து அமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்உடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

2. உற்ற வர்க்குஉத வும்பெரு மானை
ஊர்வ தொன்றுஉடை யான்உம்பர் கோனைப்
பற்றி னார்க்குஎன்றும் பற்றவன் தன்னைப்
பாவிப் பார்மனம் பாவிக்கொண் டானை
அற்ற மில்புக ழாள்உமை நங்கை
ஆத ரித்து வழிபடப் பெற்ற
கற்றை வார்சடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

3. திரியும் முப்புரம் தீப்பிழம் பாகச்
செங்கண் மால்விடை மேல்திகழ் வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந் தானைக்
காம னைக்கன லாவிழித் தானை
வரிகொள் வெள்வளை யாள்உமை நங்கை
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை எங்கள்பி ரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

★ திருவாசக, தேவாரங்களைத் தழுவி முகவைக் கண்ண முருகனார் அருணாசல ரமண பகவான் மீது பல்லாயிரக்கணக்கான பாடல்களை இயற்றியுள்ளார். அவற்றில் ஸ்ரீரமண சந்நிதிமுறையில் 50, 51 தலைப்புகள் மேற்கண்ட சுந்தரரது பதிகத்தின் பண்முறையைத் தழுவியுள்ளதால் இவ்விரு பதிகங்களில் உள்ள முதல் மூன்று பாடல்கள் பக்கம் 10, 11-இல் இணைக்கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. குண்ட லம்திகழ் காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழி லானை
வண்டலம் புமலர்க் கொன்றையி னானை
வாள ராமதி சேர்சடை யானைக்
கெண்டை யந்தடங் கண்ணுமை நங்கை
கெழுமி யேத்தி வழிபடப் பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

5. வெல்லும் வெண்மழு ஒன்றுடை யானை
வேலை நஞ்சுண்ட வித்தகன் தன்னை
அல்லல் தீர்த்தருள் செய்யவல் லானை
அரும றையவை அங்கம்வல் லானை
எல்லை யில்புக ழாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

6. திங்கள் தங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடை யானைச்
சாம வேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

7. விண்ண வர்தொழு தேத்தநின் றானை
வேதம் தான்விரித் தோதவல் லானை
நண்ணி னார்க்கென்றும் நல்லவன் தன்னை
நாளும் நாம்உகக் கின்றபி ரானை
எண்ணில் தொல்புக ழாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றுடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள்
சிந்தை யில்திக ழும்சிவன் தன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்
பாலோ டானஞ்சும் ஆட்டுகந் தானை
அந்த மில்புக ழாள்உமை நங்கை
ஆத ரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

9. வரங்கள் பெற்றுழல் வாளரக் கர்தம்
வாலி யபுரம் மூன்றெரித் தானை
நிரம்பி யதக்கன் தன்பெரு வேள்வி
நிரந்த ரம்செய்த நிட்கண் டகனைப்
பரந்த தொல்புக ழாள்உமை நங்கை
பரவி யேத்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

10. எள்க லின்றி இமையவர் கோனை
ஈச னைவழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளம் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித் தழுவவெளிப் பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

11. பெற்றம் ஏறுகந்து ஏறவல் லானைப்
பெரிய எம்பெரு மான்என்றுஎப் போதும்
கற்ற வர்பர வப்படு வானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற தென்று
கொற்ற வன்கம்பன் கூத்தன்எம் மானைக்
குளிர்பொ ழில்திரு நாவல்ஆ ரூரன்
நற்றமிழ் இவைஈ ரைந்தும் வல்லார்
நன்னெ றிஉலகு எய்துவர் தாமே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரங்கற் பத்து

தலைப்பு 50

திருச்சிற்றம்பலம்

1. வீங்கு வண்புகழ் வேங்கட ரமணா
வீற ணாமலை மேவிய சிவனே
ஓங்கும் உம்பர்க்கும் உம்பரா யவரும்
உவமை அற்றநின் உறுகழல் போற்றிப்
பாங்கு நிற்கஇப் பதகனை யாண்டாய்
பரமனே உனைப் பாவியேன் நீங்கி
ஏங்கும் ஏக்கமாம் இருந்தழல் அவிப்பாய்
எல்லை யில்லதோர் இன்பமாக் கடலே.

2. காவ லாபொலங் கழலிணை கருதிக்
கடைக்கண் நோக்கம்மேல் காதலாய் வானோர்
ஏவல் ஏற்றுநின் இருமருங்கு இருப்ப
எளிய னேற்குநின் இன்னருள் சுரந்தாய்
ஆவலாய்எனை அமரரும் காணா
அடிக்கணே புகுந்து அடங்குறப் பணியாய்
தேவதேவ சிகாமணி ரமணா
திருவ ணாமலை சேர்ந்துஒளிர் தேவே.

3. நாடி வந்துஎனை நயந்துகொண்டு ஆண்ட
நாய காஉனை நான்மறந்து அந்தோ
வாடி னேன்எரி வாய்ப்படு மென்பூ
வல்லி போலமா மாயையால் எறியுண்டு
ஆடி போல்சுழன்று அலமர லானேன்
அருளு வாய்கன யோகிக ளாலும்
தேடி எய்தரும் திரவிய ரமணா
திருவ ணாமலை சேர்ந்துஒளிர் தேவே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செத்திலாப் பத்து

தலைப்பு 51

திருச்சிற்றம்பலம்

1. குத்தி ரம்பல குயிற்றுவேன் ஒன்றும்
கொடுக்கி லேன்பிறர் கொடுப்பினும் தடுப்பேன்
சித்தி ரம்பல செப்புவேன் படைத்துச்
சிவசி வாஎனச் செப்பவோ மாட்டேன்
முக்தி எத்திறம் உயங்குவேன் அகந்தை
மோகம் முற்றுடை முழுமகன் அந்தோ
செத்தி லேன்அருட் சீரினை யெண்ணித்
திருவ ணாமலைத் தெய்வவேங் கடனே.

2. சோம்ப லாய்ப்பக லேதுயில் போவேன்
சோறு கண்டுழித் துறக்கம் என்று இருப்பேன்
பாம்ப ணிப்பரம் பரமலர்ப் பதத்துப்
பரிந்தி லேன்மனம் பாய்ந்திலேன் கண்ணீர்
ஏம்ப லாய்ப்புகழ்ந்து ஏத்திலேன் விழுச்சீர்
இந்த நாயினை எற்றினுக்கு ஆண்டாய்
தீம்ப னேன்உயச் செய்திறம் அறியேன்
திருவ ணாமலைத் தெய்வவேங் கடனே.

3. ஊமன் உன்புகழ் ஓதிட ஓதா
ஊமை அக்ஷரம் ஓதிநீ ஆண்டாய்
ஆமை போலஐந்து அடங்கிநின் அடிவாய்
அமைகு றாதுஉல காசையால் அலந்தேன்
ஏம வார்கழல் இணையடி பிரிந்தும்
இன்அருட்கு உருகிடாதவன் நெஞ்சத்
தீமை தீரஎற் செத்திடப் பணியாய்
திருவ ணாமலைத் தெய்வவேங் கடனே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. கச்சி மேற்றளி

(பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம்)

இப்பகுதியில் 108 ருத்ரர்கள் பூசித்ததால் ஆனந்த ருத்ரேசம், மகா ருத்ரேசம் எனப் பல கோயில்கள் உள்ளன. கோயில் கோபுர தெருக்கோடியில் ஞானசம்பந்தருக்கென ஆலயமும் அவர் தேவாரம் பாடியபோது உற்றுக்கேட்ட முத்தீசர் ஆலயமும் உள்ளது (அப்பதிகம் தற்போது கிடைக்கவில்லை).

அப்பர் தேவாரம் 4.043 (திருநேரிசை)

திருச்சிற்றம்பலம்

1. மறையது பாடிப் பிச்சைக்கு என்றுஅகந் திரிந்து வாழ்வார்
பிறையது சடைமு டிமேல் பெய்வளை யாள்தன் னோடும்
கறையது கண்டம் கொண்டார் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
இறையவர் பாடல் ஆடல் இலங்குமேற் றளிய னாரே.

2. மாலன மாயன் தன்னை மகிழ்ந்தனர் விருத்த ராகும்
பாலனார் பசுப தியார் பால்வெள்ளை நீறு பூசிக்
காலனைக் காலால் செற்றார் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏலநல் கடம்பன் தாதை இலங்குமேற் றளிய னாரே.

3. விண்ணிடை விண்ண வர்கள் விரும்பிவந் திறைஞ்சி வாழ்த்தப்
பண்ணிடைச் சுவையின் மிக்க கின்னரம் பாடல் கேட்பார்
கண்ணிடை மணியின் ஒப்பார் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
எண்ணிடை யெழுத்தும் ஆனார் இலங்குமேற் றளிய னாரே.

4. சோமனை அரவி னோடு சூழ்தரக் கங்கை சூடும்
வாமனை வான வர்கள் வலம்கொடு வந்து போற்றக்
காமனைக் காய்ந்த கண்ணார் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏம(ம்)நின் றாடும் எந்தை இலங்குமேற் றளிய னாரே.

5. ஊனவர் உயிரி னோடும் உலகங்கள் ஊழி யாகித்
தானவர் தனமு மாகித் தனஞ்சய னோடெ திர்ந்த
கானவர் காள கண்டர் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏனமக் கோடு பூண்டார் இலங்குமேற் றளிய னாரே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. மாயனாய் மால னாகி மலரவ னாகி மண்ணாய்த்
தேயமாய்த் திசையெட் டாகித் தீர்த்தமாய்த் திரிதர் கின்ற
காயமாய்க் காயத் துள்ளார் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏயமென் றோளி பாகர் இலங்குமேற் றளிய னாரே.

7. மண்ணினை உண்ட மாயன் தன்னைஓர் பாகங் கொண்டார்
பண்ணினைப் பாடி ஆடும் பத்தர்கள் சித்தம் கொண்டார்
கண்ணினை மூன்றும் கொண்டார் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
எண்ணினை எண்ண வைத்தார் இலங்குமேற் றளிய னாரே.

8. செல்வியைப் பாகம் கொண்டார் சேந்தனை மகனாக் கொண்டார்
மல்லிகைக் கண்ணி யோடு மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரையி லாத காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
எல்லியை விளங்க நின்றார் இலங்குமேற் றளிய னாரே.

9. வேறிணை யின்றி யென்றும் விளங்கொளி மருங்கி னாளைக்
கூறியல் பாகம் வைத்தார் கோளரா மதியும் வைத்தார்
ஆறினைச் சடையுள் வைத்தார் அணிபொழில் கச்சி தன்னுள்
ஏறினை ஏறும் எந்தை இலங்குமேற் றளிய னாரே.

10. தென்னவன் மலையெ டுக்கச் சேயிழை நடுங்கக் கண்டு
மன்னவன் விரலால் ஊன்ற மணிமுடி நெரிய வாயால்
கன்னலின் கீதம் பாடக் கேட்டவர் காஞ்சி தன்னுள்
இன்னவற் கருளிச் செய்தார் இலங்குமேற் றளிய னாரே.

திருச்சிற்றம்பலம்

சுந்தரர் தேவாரம்.7.021

(பண் : நட்டராகம்; ராகம்: பந்துவராளி)

திருச்சிற்றம்பலம்

1. நொந்தா ஒண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்
வந்தாய் போயறியாய் மனமே புகுந்துநின்ற
சிந்தாய் எந்தைபிரான் திருமேற் றளிஉறையும்
எந்தாய் உன்னையல்லால் இனியேத்த மாட்டேனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. ஆட்டான் பட்டமையால் அடியார்க்குத் தொண்டுபட்டுக்
கேட்டேன் கேட்பதெல்லாம் பிறவாமை கேட்டொழிந்தேன்
சேட்டார் மாளிகைசூழ் திருமேற் றளிஉறையும்
மாட்டே உன்னையல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே.

3. மோறாந் தோரொருகால் நினையாது இருந்தாலும்
வேறா வந்தென்னுள்ளம் புகவல்ல மெய்ப்பொருளே
சேறார் தண்கழனித் திருமேற் றளிஉறையும்
ஏறே உன்னையல்லால் இனியேத்த மாட்டேனே.

4. உற்றார் சுற்றம்எனும் அதுவிட்டு நுன்னடைந்தேன்
எற்றால் என்குறைவென் இடரைத் துறந்தொழிந்தேன்
செற்றாய் மும்மதிலும் திருமேற் றளிஉறையும்
பற்றே நுன்னையல்லால் பணிந்தேத்த மாட்டேனே.

5. எம்மான் எம்மனையென் றவரிட் டிறந்தொழிந்தார்
மெய்ம்மா லாயினதீர்த் தருள்செய்யும் மெய்ப்பொருளே
கைம்மா வீருரியாய் கனமேற் றளிஉறையும்
பெம்மான் உன்னையல்லால் பெரிதேத்த மாட்டேனே.

6. நானேல் உன்னடியே நினைந்தேன் நினைதலுமே
ஊனேர் இவ்வுடலம் புகுந்தாயென் ஒண்சுடரே
தேனே இன்னமுதே திருமேற் றளிஉறையும்
கோனே உன்னையல்லாற் குளிர்ந்தேத்த மாட்டேனே.

7. கையார் வெஞ்சிலைநாண் அதன்மேல் சரங்கோத்தே
எய்தாய் மும்மதிலும் எரியுண்ண எம்பெருமான்
செய்யார் பைங்கமலத் திருமேற் றளியுறையும்
ஐயா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.

8. விரையார் கொன்றையினாய் விமலாஇனி உன்னையல்லால்
உரையேன் நாவதனால் உடலில்உயிர் உள்ளளவும்
திரையார் தண்கழனித் திருமேற் றளியுறையும்
அரையா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. நிலையாய் நின்னடியே நினைந்தேன் நினைதலுமே
தலைவா நின்னினையப் பணித்தாய் சலமொழிந்தேன்
சிலையார் மாமதில்சூழ் திருமேற் றளியுறையும்
மலையே உன்னையல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே.

10. பாரூர் பல்லவனூர் மதில்காஞ்சி மாநகர்வாய்ச்
சீரூ ரும்புறவில் திருமேற் றளிச்சிவனை
ஆரூர் அன்னடியான் அடித்தொண்டன் ஆரூரன்சொன்ன
சீரூர் பாடல்வல்லார் சிவலோகம் சேர்வாரே.

திருச்சிற்றம்பலம்

தொண்டை நாடு – ஞானசம்பந்தர் 31 பதிகங்கள்; அப்பர் 23; சுந்தரர் 15 என – 69 பதிகங்கள் கொண்ட சுமார் 700 தேவாரப் பாடல்களைக் கொண்டது.

இவற்றுள் கச்சி ஏகம்பம், திருவாலங்காடு, திருவொற்றியூர், காளத்தி, கழுக்குன்றம் ஆகிய 5 தலங்கள் மூவராலும்; 16 தலங்கள் ஞானசம்பந்தராலும்; திருமால்பூர், திருப்பாசூர், திருவான்மியூர் என்னும் 3 தலங்கள் ஞானசம்பந்தர், அப்பராலும்; கச்சி-மேல்தளி – அப்பர், சுந்தரராலும்; 7 தலங்கள் சுந்தரராலும் பாடப்பெற்ற 32 தலங்களாகும்.

பதினான்கு தலங்கள், காஞ்சிபுரம் & அருகில்: கச்சி-ஏகம்பம், கச்சி-மேற்றளி, அனேக தங்காவதம், ஓண-காந்தன்-தளி, திருக்-காலிமேடு, மாகறல், குரங்-கணில்-முட்டம், பனங்காடு, செய்யார், திரு-வலம், திரு-மால்பூர், தக்கோலம், எலுமியன் கோட்டூர், திரு-வாலங் காடு.

பத்து தலங்கள் சென்னை & அருகில்: மயிலை, திரு-வான்மியூர், திரு-வேற்காடு, திரு-ஒற்றியூர்; திரு-வலிதாயம் (பாடி), திரு-முல்லைவாயில், திருக்-கள்ளில், திரு-விற்கோலம் (கூவம்), திருப்-பாசூர், திரு-வெண்பாக்கம் (பூண்டி-நீர்த்தேக்கம் அருகில்).

நான்கு தலங்கள் செங்கல்பட்டு அருகில்: அச்சிறுபாக்கம், திருக்-கழுக்குன்றம், திரு-இடைச்சுரம், திருக்-கச்சூர்.

மூன்று தலங்கள் திண்டிவனம் அருகில்: இரும்பை-மாகாளம், அரசிலி, திருவக்கரை.

ஒரு தலம்: திருக்-காளத்தி - திருப்பதிக்கு அருகில் - ஆந்திர மாநிலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. ஓணகாந்தன்தளி

(காஞ்சிபுரம் - பஞ்சுப்பேட்டை)

வாணாசுரனுடைய சேனாதிபதிகளான ஓணன், காந்தன் வழிபட்ட தலம். ஜலந்தரன் வழிபட்ட ஜலேந்தரேஸ்வரர் சந்நிதியும் உள்ளது.

சுந்தரர் இங்குவந்து தேவாரம் பாட, இறைவன் அருகிலிருந்த புளிய மரத்தில் சென்று ஒளிந்துகொண்டு, பின்னர் சுந்தரருக்காக புளியங் காய்களையே பொன் காய்களாகப் பொழியச் செய்தார்.

சுந்தரர் தேவாரம் 7.005

(பண் : இந்தளம்; ராகம்: நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

1. நெய்யும் பாலும் தயிரும் கொண்டு நித்தல் பூசனை செய்ய லுற்றார்
கையில் ஒன்றும் காண மில்லைக் கழல டிதொழுது உய்யின் அல்லால்
ஐவர் கொண்டிங்கு ஆட்ட ஆடி ஆழ்கு ழிப்பட்டு அழுந்து வேனுக்கு
உய்யு மாறொன்று அருளிச் செய்யீர் ஓண காந்தன் தளி உளீரே.

2. திங்கள் தங்கு சடைக்கண் மேலோர் திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய்தி றவாள் கணப தியேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை தேவி யார்கோற் றட்டி யாளார்
உங்க ளுக்காட் செய்ய மாட்டோம் ஓண காந்தன் தளி உளீரே.

3. பெற்ற போழ்தும் பெறாத போழ்தும் பேணி உம்கழல் ஏத்து வார்கள்
மற்றோர் பற்றிலர் என்றி ரங்கி மதிஉ டையவர் செய்கை செய்யீர்
அற்ற போழ்தும் அலந்த போழ்தும் ஆவற் காலத் தடிகேள் உம்மை
ஒற்றி வைத்திங் குண்ண லாமோ ஓண காந்தன் தளி உளீரே.

4. வல்ல தெல்லாம் சொல்லி உம்மை வாழ்த்தி னாலும் வாய்தி றந்தொன்று
இல்லை என்னீர் உண்டும் என்னீர் எம்மை ஆள்வான் இருப்ப தென்னீர்
பல்லை யுக்கப் படுத லையில் பகல்எ லாம்போய்ப் பலிதி ரிந்திங்கு
ஒல்லை வாழ்க்கை ஒழிய மாட்டீர் ஓண காந்தன் தளி உளீரே.

5. கூடிக் கூடித் தொண்டர் தங்கள் கொண்ட பாணி குறைப டாமே
ஆடிப் பாடி அழுது நெக்கங் கன்பு டையவர்க் கின்பம் ஓரீர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேடித் தேடித் திரிந்தெய்த் தாலும் சித்தம் என்பால் வைக்க மாட்டீர்
ஓடிப் போகீர் பற்றும் தாரீர் ஓண காந்தன் தளி உளீரே.

6. வாரி ருங்குழல் வாள்நெ டுங்கண் மலைம கள்மது விம்மு கொன்றைத்
தாரி ருந்தட மார்பு நீங்காத் தைய லாள்உல குய்ய வைத்த
காரி ரும்பொழிற் கச்சி மூதூர்க் காமக் கோட்டம் உண்டாக நீர்போய்
ஊரி டும்பிச்சை கொள்வ தென்னே ஓண காந்தன் தளி உளீரே.

7. பொய்ம்மை யாலே போது போக்கிப் புறத்தும் இல்லை அகத்தும் இல்லை
மெய்ம்மை சொல்லி ஆள மாட்டீர் மேலை நாளொன் றிடவுங் கில்லீர்
எம்மைப் பெற்றால் ஏதும் வேண்டீர் ஏதுந் தாரீர் ஏதும் ஓதீர்
உம்மை அன்றே எம்பெ ருமான் ஓண காந்தன் தளி உளீரே.

8. வலையம் வைத்த கூற்றம் ஈவான் வந்து நின்ற வார்த்தை கேட்டுச்
சிலைஅ மைத்த சிந்தை யாலே திருவ டிதொழு துய்யின் அல்லால்
கலைஅ மைத்த காமச் செற்றக் குரோத லோப மதம வருடை
உலைஅ மைத்திங் கொன்ற மாட்டேன் ஓண காந்தன் தளி உளீரே.

9. வார மாகித் திருவ டிக்குப் பணிசெய் தொண்டர் பெறுவ தென்னே
ஆரம் பாம்பு வாழ்வ தாரூர் ஒற்றி யூரேல் உம்ம தன்று
தார மாகக் கங்கை யாளைச் சடையில் வைத்த அடிகேள் உந்தம்
ஊரும் காடு உடையும் தோலே ஓண காந்தன் தளி உளீரே.

10. ஓவ ண(ம்)மேல் எருதொன் றேறும் ஓண காந்தன் தளிஉ ளார்தாம்
ஆவ ணம்செய்து ஆளும் கொண்ட வரைது கில்லொடு பட்டு வீக்கிக்
கோவ ணம்மேல் கொண்ட வேடம் கோவை யாகஆ ரூரன் சொன்ன
பாவ ணத்தமிழ் பத்தும்வல் லார்க்குப் பறையும் தாம்செய்த பாவம் தானே.

திருச்சிற்றம்பலம்

	தொண்டை நாட்டுத் தலங்கள் (தல வரிசையின்படி)	இறைவர்	இறைவியார்
1	கச்சி ஏகம்பம்	ஏகாம்பரேஸ்வரர்	காமாட்சி (ஏலவார்குழலி)
2	கச்சி மேற்றளி	திருமேற்றளீஸ்வரர்	திருமேற்றளிநாயகி
3	ஓணகாந்தன்தளி	ஓணகாந்தேஸ்வரர்	காமாட்சி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. அனேகதங்காவதம்

(காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து புத்தேரித் தெரு வழியாகக் கயிலாயநாதர் கோயிலுக்குச் சற்று முன்பு இடப்புறத்தில் இக்கோயில் உள்ளது)

(அனேகதம் - யானை). விநாயகர் சிவலிங்கத் திருமேனியை பிரதிஷ்டை செய்து வழிபட்ட தலம். குபேரனும் வழிபட்டு அருள்பெற்றது.

ஞானசம்பந்தர் தேவாரம் 2.005

(பண் : இந்தளம்; ராகம்: நாதநாமக்கிரியை)

1. நீடல் மேவுநிமிர் புன்சடை மேலொர் நிலாமுளை
சூடல் மேவுமறை யின்முறை யாலொர் சுலாவழல்
ஆடல் மேவுமவர் மேய அனேகதங் காவதம்
பாடல் மேவுமனத் தார்வினை பற்றறுப் பார்களே.

2. சூலம் உண்டுமழு உண்டவர் தொல்படை சூழ்கடல்
ஆல முண்டபெரு மான்தன் அனேகதங் காவதம்
நீல முண்டதடங் கண்ணுமை பாகம் நிலாயதோர்
கோல முண்டள வில்லை குலாவிய கொள்கையே.

3. செம்பி னாருமதில் மூன்றெரி யச்சின வாயதோர்
அம்பி னாலெய்தருள் வில்லி அனேகதங் காவதம்
கொம்பின் நேரிடை யாளொடும் கூடிக்கொல் லேறுடை
நம்பன் நாம(ம்)நவி லாதன நாவென லாகுமே.

4. தந்தத் திந்தத்தடம் என்றரு வித்திரள் பாய்ந்துபோய்ச்
சிந்த வெந்தகதி ரோனொடு மாசறு திங்களார்
அந்தம் இல்லஅள வில்ல அனேகதங் காவதம்
எந்தை வெந்தபொடி நீறணி வார்க்கிடம் ஆவதே.

5. பிறையு(ம்) மாசில்கதி ரோன்அறி யாமைப் பெயர்ந்துபோய்
உறையும் கோயில் பசும்பொன் னணியார் அசும்பார்புனல்
அறையும் ஓசை பறைபோலும் அனேகதங் காவதம்
இறையெம் ஈசன் எம்மான் இடம்ஆக உகந்ததே.

6. தேனை யேறுநறு மாமலர் கொண்டடி சேர்த்துவீர்
ஆனை யேறு(ம்)அணி சாரல் அனேகதங் காவதம்
வானை யேறுநெறி சென்றுஉண ருந்தனை வல்லிரேல்
ஆனை யேறுமுடி யானருள் செய்வதும் வானையே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. வெருவி வேழம்இரி யக்கதிர் முத்தொடு வெண்பளிங்கு
உருவி வீழவயி ரம்கொழி யாஅகில் உந்திவெள்
அருவி பாயும்அணி சாரல் அனேகதங் காவதம்
மருவி வாழும்பெரு மான்கழல் சேர்வது வாய்மையே.

8. ஈரம் ஏதும்இல னாகி யெழுந்த விராவணன்
வீரம் ஏதுமில னாக விளைத்த விலங்கலான்
ஆரம் பாம்பது அணிவான்தன் அனேகதங் காவதம்
வார மாகிநினை வார்வினை யாயின மாயுமே.

9. கண்ணன் வண்ணமல ரானொடும் கூடியோர்க் கையமாய்
எண்ணும் வண்ணம்அறி யாமை யெழுந்ததோர் ஆரழல்
அண்ணல் நண்ணும்அணி சாரல் அனேகதங் காவதம்
நண்ணும் வண்ணம்உடை யார்வினை யாயின நாசமே.

10. மாப தம்மறி யாதவர் சாவகர் சாக்கியர்
ஏப தம்பட நின்றிறு மாந்துழல் வார்கள்தாம்
ஆப தம்மறி வீருளி ராகில் அனேகதங்
காப தம்அமர்ந் தான்கழல் சேர்தல் கருமமே.

11. தொல்லைஊ ழிப்பெயர் தோன்றிய தோணிபு ரத்திறை
நல்லகேள் வித்தமிழ் ஞானசம் பந்தன்நல் லார்கள்முன்
அல்லல் தீரவுரை செய்த அனேகதங் காவதம்
சொல்ல நல்லஅடை யும்அடை யாசுடு துன்பமே.

திருச்சிற்றம்பலம்

சுந்தரர் தேவாரம்.7.010

***(பண் : இந்தளம்; ராகம்: நாதநாமக்கிரியை)**

திருச்சிற்றம்பலம்

1. தேனெய் புரிந்துழல் செஞ்சடை எம்பெரு
மானதி டம்திகழ் ஐங்கணையக்

★ குறிப்பு: திருவாசக-திருப்படையாட்சியைத் தழுவிய ஸ்ரீரமண சந்நிதிமுறை, 37-ஆவது தலைப்பு மேற்கண்ட பண்/ராகத்தில் அமைந்துள்ளதாக வ.சு. செங்கல்வராயப் பிள்ளையவர்கள் குறிப்பிட்டுள்ளார். எனவே இத்தலைப்பிலுள்ள ஒருபாடல் இப்பதிக இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோனை எரித்தெரி ஆடி இடம்குல
வான திடம்குறை யாமறையாம்
மானை இடத்ததோர் கையன் இடம்மத(ம்)
மாறு படப்பொழி யும்மலைபோல்
யானை யுரித்த பிரான திடம்கலிக்
கச்சி அனேகதங் காவதமே.

2. கூறு நடைக்குழி கட்பகு வாயன
பேயுகந் தாடநின் றோரியிட
வேறு படக்குட கத்திலை யம்பல
வாணன்நின் றாடல் விரும்புமிடம்
ஏறு விடைக்கொடி எம்பெரு மான்இமை
யோர்பெரு மான்உமை யாள்கணவன்
ஆறு சடைக்குடை அப்ப னிடம்கலிக்
கச்சி அனேகதங் காவதமே.

3. கொடிக ளிடைக்குயில் கூவுமி டம்மயி
லாலும் மிடம்மழு வாளுடைய
கடிகொள் புனல்சடை கொண்ட நுதற்கறைக்
கண்டன் இடம்பிறைத் துண்டமுடிச்
செடிகொள் வினைப்பகை தீரும் இடம்திரு
வாகும் இடம்திரு மார்பகலத்து
அடிக ளிடம்அழல் வண்ணன் இடம்கலிக்
கச்சி அனேகதங் காவதமே.

4. கொங்கு நுழைத்தன வண்டறை கொன்றையுங்
கங்கையுந் திங்களுஞ் சூடு(ம்)சடை
மங்குல் நுழைமலை மங்கையை நங்கையைப்
பங்கினில் தங்க உவந்தருள்செய்
சங்கு குழைச்செவி கொண்டரு வித்திரள்
பாய வியாத்தழல் போலுடைத்தம்
அங்கை மழுத்திகழ் கையன் இடம்கலிக்
கச்சி அனேகதங் காவதமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. பைத்த படத்தலை ஆடர வம்பயில்
கின்ற இடம்பயி லப்புகுவார்
சித்தம் ஒருநெறி வைத்த இடம்திகழ்
கின்ற இடம்திரு வானடிக்கே
வைத்த மனத்தவர் பத்தர் மனங்கொள
வைத்த இடம்மழு வாளுடைய
அத்தன் இடம்அழல் வண்ணன் இடம்கலிக்
கச்சி அனேகதங் காவதமே.

6. தண்ட முடைத்தரு மன்தமர் என்தம
ரைச்செயும் வன்துயர் தீர்க்குமிடம்
பிண்ட முடைப்பிற வித்தலை நின்று
நினைப்பவர் ஆக்கையை நீக்குமிடம்
கண்ட முடைக்கரு நஞ்சை நுகர்ந்த
பிரான திடங்கடல் ஏழுகடந்து
அண்ட முடைப்பெரு மான திடம்கலிக்
கச்சி அனேகதங் காவதமே.

7. கட்டு மயக்க(ம்) அறுத்தவர் கைதொழுது
ஏத்தும் இடம்கதி ரோன்ஒளியால்
விட்ட இடம்விடை ஊர்தி இடம்குயில்
பேடைதன் சேவலோடு ஆடுமிடம்
மட்டு மயங்கி அவிழ்ந்த மலர்ஒரு
மாதவி யோடு மணம்புணரும்
அட்ட புயங்கப் பிரான திடம்கலிக்
கச்சி அனேகதங் காவதமே.

8. புல்லி இடம்தொழு துய்தும் எனாதவர்
தம்புர(ம்) மூன்றும் பொடிப்படுத்த
வில்லி இடம்விர வாதுயிர் உண்ணும்வெங்
காலனைக் கால்கொடு வீந்தவியக்
கொல்லி இடம்குளிர் மாதவி மவ்வல்
குராவகு ளங்குருக் கத்திபுன்னை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அல்லி யிடைப்பெடை வண்டுறங் கும்கலிக்
கச்சி அனேகதங் காவதமே.

9. சங்கை யவர்புணர் தற்கரி யான்தள
வேனகை யாள்தவி ராமிகுசீர்
மங்கை யவள்மகி ழச்சுடு காட்டிடை
நட்டம்நின் றாடிய சங்கரனெம்
அங்கையி னல்லனல் ஏந்து மவன்கனல்
சேரொளி யன்னதோர் பேரகலத்து
அங்கை யவன்உறை கின்ற இடம்கலிக்
கச்சி அனேகதங் காவதமே.

10. வீடு பெறப்பல ஊழிகள் நின்று
நினைக்கும் இடம்வினை தீருமிடம்
பீடு பெறப்பெரி யோர திடங்கொண்டு
மேவினர் தங்களைக் காக்குமிடம்
பாடு மிடத்தடி யான்புகழ் ஊரன்
உரைத்தஇம் மாலைகள் பத்தும்வல்லார்
கூடும் இடம்சிவ லோகன் இடம்கலிக்
கச்சி அனேகதங் காவதமே.

திருச்சிற்றம்பலம்

திருப்படையாட்சி

தலைப்பு 37

திருச்சிற்றம்பலம்

1. கோல விழிப்படை ஆட்சி வளம்பல கூறுதும் ஆகாதே
கோமள மாயை தனாது குடர்கள் குமைந்திடும் ஆகாதே
ஆலமும் நல்அமுதாய்அடி யோங்களுக்கு ஆயிடும் ஆகாதே
அளவு படாத அகண்டமு நெஞ்சுள் அகப்படும் ஆகாதே
சீலம் அனைத்தும்என் சிந்தையில் வந்து செறிந்திடும் ஆகாதே
சிந்தை மகிழ்ந் திடச் சீரடி யார்குழுச் சேர்ந்திடும் ஆகாதே
மூல இருள்தொகை மூண்டு கிடந்தது முற்றிலு மாய்ந்திடவே
முச்சுட ருக்கு முதற்சுடர் வேங்கடன் முற்படும் ஆயிடிலே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. காரைக்காடு

(காஞ்சிபுரம் திருக்காலிமேடு. ரயில்வே ரோடு தலைமை அஞ்சல் நிலையத்திற்கு எதிரில் திருக்காலிமேட்டிற்குச் செல்லும் பாதையில் உள்ள ஆலயம்)

சிவலிங்கத் திருமேனி செம்மண் நிறம் கொண்டது. இந்திரனும் புதனும் வழிபட்ட சுயம்பு லிங்கம்.

ஞானசம்பந்தர் தேவாரம் 3.065
(பண்: பஞ்சமம்; ராகம்: ஆகிரி)

திருச்சிற்றம்பலம்

1. வாரணவு முலைமங்கை பங்கினராய் அங்கையினில்
போரணவு மழுவொன்றங்கு ஏந்திவெண் பொடியணிவர்
காரணவு மணிமாடம் கடைநவின்ற கலிக்கச்சி
நீரணவு மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காட்டாரே.

2. காரூரும் மணிமிடற்றார் கரிகாடர் உடைதலைகொண்
டூரூரன் பலிக்குழல்வார் உழைமானின் உரியதளர்
தேரூரும் நெடுவீதிச் செழுங்கச்சி மாநகர்வாய்
நீரூரும் மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காட்டாரே.

3. கூறணிந்தார் கொடியிடையைக் குளிர்சடைமேல் இளமதியோ
டாறணிந்தார் ஆடரவம் பூண்டுகந்தார் ஆன்வெள்ளை
ஏறணிந்தார் கொடியதன்மேல் என்பணிந்தார் வரைமார்பில்
நீறணிந்தார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே.

4. பிறைநவின்ற செஞ்சடைகள் பின்தாழப் பூதங்கள்
மறைநவின்ற பாடலோடு ஆடலராய் மழுவேந்திச்
சிறைநவின்ற வண்டினங்கள் தீங்கனிவாய்த் தேன்கதுவும்
நிறைநவின்ற கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே.

5. அன்றாலின் கீழிருந்தங் கறம்புரிந்த அருளாளர்
குன்றாத வெஞ்சிலையில் கோளரவம் நாண்கொளுவி
ஒன்றாதார் புரம்மூன்றும் ஓங்கெரியில் வெந்தவிய
நின்றாரும் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. பன்மலர்கள் கொண்டடிக்கீழ் வானோர்கள் பணிந்திறைஞ்ச
நன்மையிலா வல்லவுணர் நகர்மூன்றும் ஒருநொடியில்
வின்மலையின் நாண்கொளுவி வெங்கணையால் எய்தழித்த
நின்மலனார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே.

7. புற்றிடை வாள்அரவினொடு புனைகொன்றை மதமத்தம்
எற்றொழியா அலைபுனலோ டிளமதியம் ஏந்துசடைப்
பெற்றுடையார் ஒருபாகம் பெண்ணுடையார் கண்ணமரும்
நெற்றியினார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே.

8. ஏழ்கடல்சூழ் தென்னிலங்கைக் கோமானை எழில்வரைவாய்த்
தாழ்விரலால் ஊன்றியதோர் தன்மையினார் நன்மையினார்
ஆழ்கிடங்கும் சூழ்வயலு(ம்) மதில்புல்கி அழகமரும்
நீள்மறுகிற் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே.

9. ஊண்டானும் ஒலிகடல்நஞ் சுடைதலையிற் பலிகொள்வர்
மாண்டார்தம் எலும்பணிவர் வரியரவோ டெழிலாமை
பூண்டாரும் ஓரிருவர் அறியாமைப் பொங்கெரியாய்
நீண்டாரும் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே.

10. குண்டாடிச் சமண்படுவார் கூறைதனை மெய்போர்த்து
மிண்டாடித் திரிதருவார் உரைப்பனகள் மெய்யல்ல
வண்டாரும் குழலாளை வரையாகத் தொருபாகம்
கண்டாரும் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே.

11. கண்ணாரும் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டுறையும்
பெண்ணாரும் திருமேனிப் பெருமானது அடிவாழ்த்தித்
தண்ணாரும் பொழில்காழித் தமிழ்ஞான சம்பந்தன்
பண்ணாரும் தமிழ்வல்லார் பரலோகத் திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்

	தொண்டை நாட்டுத் தலங்கள் (தல வரிசையின்படி)	இறைவர்	இறைவியார்
4	அனேகதங்காவதம்	அனேகதங்காவதேஸ்வரர்	காமாட்சி
5	காரைக்காடு	சத்யநாதர்	பிரமராம்பிகை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. குரங்கணில்முட்டம்

(காஞ்சிபுரம் - வந்தவாசி மார்க்கம். தூசி கிராமத்திலிருந்து கிழக்கில் 2 கி.மீ.)

வாலி குரங்கு வடிவிலும், இந்திரன் அணில் வடிவிலும், எமன் முட்டம் (காகம்) வடிவிலும் இறைவனை வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.

ஞானசம்பந்தர் தேவாரம் 1.031
(பண்: தக்கராகம்; ராகம்: காம்போதி)

திருச்சிற்றம்பலம்

1. விழுநீர் மழுவாள் படைஅண் ணல்விளங்கும்
கழுநீர் குவளைம் மலரக் கயல்பாயும்
கொழுநீர் வயல்சூழ்ந்த குரங் கணில்முட்டம்
தொழுநீர் மையர்தீ துறுதுன் பம்இலரே.

2. விடைசேர் கொடிஅண் ணல்விளங் குயர்மாடக்
கடைசேர் கருமென் குளத்தோங் கியகாட்டில்
குடையார் புனல்மல் குகுரங் கணில்முட்டம்
உடையான் எனையா ளுடைஎந் தைபிரானே.

3. சூலப் படையான் விடையான் சுடுநீற்றான்
காலன் தனைஆ ருயிர்வவ் வியகாலன்
கோலப் பொழில்சூழ்ந் தகுரங் கணில்முட்டம்
தேலம் கமழ்புன் சடைஎந்தை பிரானே.

4. வாடா விரிகொன் றைவலத் தொருகாதில்
தோடார் குழையான் நலபா லன நோக்கி
கூடா தனசெய் தகுரங் கணில்முட்டம்
ஆடா வருவா ரவரன் புடையாரே.

5. இறையார் வளையா ளையொர்பா கத்தடக்கிக்
கறையார் மிடற்றான் கரிகீ றியகையான்
குறையார் மதிசூ டிகுரங் கணில்முட்டத்
துறைவா னெமையா ளுடையொண் சுடரானே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. பலவும் பயனுள் ளனபற் றும்ஒழிந்தோம்
கலவம் மயில்கா முறுபே டையொடாடிக்
குலவும் பொழில்சூழ்ந் தகுரங் கணில்முட்டம்
நிலவும் பெருமான் அடிநித் தல்நினைந்தே.

7. மாடார் மலர்க்கொன் றைவளர் சடைவைத்துத்
தோடார் குழைதான் ஒருகா தில்இலங்கக்
கூடார் மதிலெய் துகுரங் கணில்முட்டத்
தாடார் அரவம் அரையார்த்து அமர்வானே.

8. மையார் நிறம்மே னிஅரக் கர்தம்கோனை
உய்யா வகையால் அடர்த்தின் னருள்செய்த
கொய்யார் மலர்சூ டிகுரங் கணில்முட்டம்
கையால் தொழுவார் வினைகாண் டல்அரிதே.

9. வெறியார் மலர்த்தா மரையா னொடுமாலும்
அறியா தசைந்தேத் தவோர் ஆரழலாகும்
குறியால் நிமிர்ந்தான் தன்குரங் கணில்முட்டம்
நெறியால் தொழுவார் வினைநிற் கதிலாவே.

10. கழுவார் துவரா டைகலந் துமெய்போர்க்கும்
வழுவாச் சமண்சாக் கியர்வாக் கவைகொள்ளேல்
குழுமின் சடையண் ணல்குரங் கணில்முட்டத்
தெழில்வெண் பிறையான் அடிசேர் வதியல்பே.

11. கல்லார் மதில்கா ழியுள்ஞான சம்பந்தன்
கொல்லார் மழுவேந் திகுரங் கணில்முட்டம்
சொல்லார் தமிழ்மா லைசெவிக் கினிதாக
வல்லார்க் கெளிதாம் பிறவா வகைவீடே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. மாகறல்

காஞ்சிபுரம் - உத்திரமேரூர் (வழி) ஓரிக்கை - பேருந்துப் பாதையில் உள்ளது

(மாகறல் - தங்க உடும்பு) இராசேந்திரசோழனுக்கு, இறைவன் பொன் உடும்பாகத் தோன்றி, காட்சியருளிய தலம். சுயம்பு மூர்த்தி. இந்திரன் வழிபட்ட தலம்.

சம்பந்தர் பதிகம் 'வினை நீக்கும் பதிகம்' என்னும் சிறப்புடையது.

ஞானசம்பந்தர் தேவாரம் 3.072
(பண்: சாதாரி; ராகம்: பந்துவராளி)

திருச்சிற்றம்பலம்

1. விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
 பாடல்விளை யாடல்அரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி
 நீடுபொழில் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர்
 திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை அண்ணலடி சேர்பவர்கள்
 தீவினைகள் தீருமுடனே.

2. கலையினொலி மங்கையர்கள் பாடல்ஒலி
 யாடல்கவின் எய்தியழகார்
மலையின்நிகர் மாடமுயர் நீள்கொடிகள்
 வீசுமலி மாகறலுளான்
இலையின்மலி வேல்நுனைய சூலம்வலன்
 ஏந்தியெரி புன்சடையினுள்
அலைகொள்புன லேந்துபெரு மானடியை
 யேத்தவினை அகலுமிகவே.

3. காலையொடு துந்துபிகள் சங்குகுழல்
 யாழ்முழவு காமருவுசீர்
மாலைவழி பாடுசெய்து மாதவர்கள்
 ஏத்திமகிழ் மாகறலுளான்
தோலையுடை பேணியதன் மேலொர்சுடர்
 நாகமசை யாஅழகிதாப்
பாலையன நீறுபுனை வான்அடியை
 யேத்தவினை பறையுமுடனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. இங்குகதிர் முத்தினொடு பொன்மணிகள்
உந்தியெழில் மெய்யுளுடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னுபுன
லாடிமகிழ் மாகறலுளான்
கொங்குவளர் கொன்றைகுளிர் திங்களணி
செஞ்சடையி னான்அடியையே
நுங்கள்வினை தீரமிக ஏத்திவழி
பாடுநுக ராஎழுமினே.

5. துஞ்சுநறு நீலமிருள் நீங்கவொளி
தோன்றுமது வார்கழனிவாய்
மஞ்சுமலி பூம்பொழிலின் மயில்கள்நட
மாடல்மலி மாகறலுளான்
வஞ்சமத யானையுரி போர்த்துமகிழ்
வானொர்மழு வாளன்வளரும்
நஞ்சமிருள் கண்டமுடை நாதனடி
யாரைநலி யாவினைகளே.

6. மன்னுமறை யோர்களொடு பல்படிம
மாதவர்கள் கூடிஉடனாய்
இன்னவகை யாலினிதி றைஞ்சியிமை
யோரிலெழு மாகறலுளான்
மின்னைவிரி புன்சடையின் மேன்மலர்கள்
கங்கையொடு திங்களெனவே
உன்னுமவர் தொல்வினைகள் ஒல்கவுயர்
வானுலகம் ஏறலெளிதே.

7. வெய்யவினை நெறிகள்செல வந்தணையும்
மேல்வினைகள் வீட்டலுறுவீர்
மைகொள்விரி கானல்மது வார்கழனி
மாகறலு ளான்எழிலதார்
கையகரி கால்வரையின் மேலதுரி
தோலுடைய மேனியழகார்
ஐயனடி சேர்பவரை அஞ்சியடை
யாவினைகள் அகலுமிகவே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. தூசுதுகில் நீள்கொடிகள் மேகமொடு
தோய்வனபொன் மாடமிசையே
மாசுபடு செய்கைமிக மாதவர்கள்
ஓதிமலி மாகறலுளான்
பாசுபத இச்சைவரி நச்சரவு
கச்சையுடை பேணியழகார்
பூசுபொடி ஈசனென ஏத்தவினை
நிற்றலில போகுமுடனே.

9. தூயவிரி தாமரைகள் நெய்தல்கழு
நீர்குவளை தோன்றமதுவுண்
பாயவரி வண்டுபல பண்முரலும்
ஓசைபயில் மாகறலுளான்
சாயவிர லூன்றியஇ ராவணன
தன்மைகெட நின்றபெருமான்
ஆயபுக ழேத்தும்அடி யார்கள்வினை
யாயினவும் அகல்வதெளிதே.

10. காலின்நல பைங்கழல்கள் நீள்முடியின்
மேலுணர்வு காமுறவினார்
மாலுமல ரானும்அறி யாமையெரி
யாகியுயர் மாகறலுளான்
நாலுமெரி தோலுமுரி மாமணிய
நாகமொடு கூடிஉடனாய்
ஆலும்விடை யூர்திஉடை யடிகள்அடி
யாரைஅடை யாவினைகளே.

11. கடைகொள்நெடு மாடமிக ஓங்குகமழ்
வீதிமலி காழியவர்கோன்
அடையும்வகை யால்பரவி அரனையடி
கூடுசம் பந்தன்உரையால்
மடைகொள்புன லோடுவயல் கூடுபொழில்
மாகறலு ளான்அடியையே
உடையதமிழ் பத்துமுணர் வாரவர்கள்
தொல்வினைகள் ஒல்குமுடனே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. திருவோத்தூர் (செய்யார்)

காஞ்சியிலிருந்து 15 கி.மீ. வந்தவாசி, திருவண்ணாமலை, போளூர், ஆரணி முதலிய ஊர்களில் இருந்தும் இவ்வூருக்கு வரலாம்.

(ஒத்து - வேதம்). இறைவன் வேதத்திற்குப் பொருள் அருளிய இடமாதலின் திருவோத்தூர். தொண்டைமான் இங்குள்ள வேதபுரீஸ்வரரைத் துதித்து பகையரசனை வெல்ல வேண்டியதன்பொருட்டு, அவனுக்கு உதவ நந்தி சென்றதால் கோயிலில் நந்தி வெளிமுகம் கொண்டுள்ளது. சமணர்களின் செருக்கை அடக்க சம்பந்தர் பதிகம்பாடி, ஆண்பனை, பெண்பனையான தலம்.

ஞானசம்பந்தர் தேவாரம் 1.054
(பண்: பழந்தக்கராகம்; ராகம்: ஆரபி)

திருச்சிற்றம்பலம்

1. பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணும்கால்
ஒத்தூர் மேய வொளிமழு வாள்அங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே.

2. இடையீர் போகா இளமுலை யாளையோர்
புடையீ ரேபுள்ளி மானுரி
உடையீ ரேயும்மை யேத்துதும் ஓத்தூர்ச்
சடையீ ரேயும தாளே.

3. உள்வேர் போல நொடிமை யினார்திறம்
கொள்வீ ரல்குலோர் கோவணம்
ஒள்வா ழைக்கனி தேன்சொரி யோத்தூர்க்
கள்வீ ரேயும காதலே.

4. தோட்டீ ரேதுத்தி யைந்தலை நாகத்தை
ஆட்டீ ரேயடி யார்வினை
ஓட்டீ ரேஉம்மை யேத்துதும் ஓத்தூர்
நாட்டீ ரேயருள் நல்குமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. குழையார் காதீர் கொடுமழு வாட்படை
உழையாள் வீர்திரு வோத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின் றாடுவார்
அழையா மேயருள் நல்குமே.

6. மிக்கார் வந்து விரும்பிப் பலியிடத்
தக்கார் தம்மக்க ளீரென்று
உட்கா தாருள ரோதிரு வோத்தூர்
நக்கீ ரேயருள் நல்குமே.

7. தாதார் கொன்றை தயங்கு முடியுடை
நாதா என்று நலம்புகழ்ந்து
ஓதா தார்உள ரோதிரு வோத்தூர்
ஆதீ ரேயருள் நல்குமே.

8. என்தா னிம்மலை என்ற அரக்கனை
வென்றார் போலும் விரலினால்
ஒன்றார் மும்மதில் எய்தவன் ஓத்தூர்
என்றார் மேல்வினை யேகுமே.

9. நன்றா நான்மறை யானொடு மாலுமாய்ச்
சென்றார் போலும் திசையெலாம்
ஒன்றா யொள்ளெரி யாய்மிக வோத்தூர்
நின்றீ ரேஉமை நேடியே.

10. கார மண்கலிங் கத்துவ ராடையர்
தேரர் சொல்லவை தேறன்மின்
ஓரம் பால்எயில் எய்தவன் ஓத்தூர்ச்
சீர வன்கழல் சேர்மினே.

11. குரும்பை யாண்பனை யீன்குலை ஓத்தூர்
அரும்பு கொன்றை அடிகளைப்
பெரும்பு கலியுள் ஞானசம் பந்தன்சொல்
விரும்பு வார்வினை வீடே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. வன்பார்த்தான் பனங்காட்டூர் - திருப்பனங்காடு

காஞ்சிபுரத்திலிருந்து கலவை பாதையில் பெருங்கட்டூர் அருகில்

அமிர்தவல்லி சமேத தாளபுரீஸ்வரர் மற்றும் கிருபாநாயகி சமேத கிருபாநாதேஸ்வரர் (அகத்தியர், புலஸ்தியர் வழிபட்ட) இரு தனி சந்நிதிகள் அமைந்துள்ளன. சுந்தரருக்கு உணவளித்த இறைவன் கோயிலுக்குச் சற்று தூரத்தில் ஓரிடத்தில் தன் பாதத்தால் கிளறி உண்டாக்கிய 'ஊற்று தீர்த்தம்' (ஊற்றங்குழி) அமைந்துள்ளது.

பனம்பழம் சுவாமிக்கு நிவேதனம் செய்யப்படுகிறது.

சுந்தரர் தேவாரம் 7.086

(பண்: சீகாமரம்; ராகம்: நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

1. விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை
அடையில்அன்பு உடையானை யாவர்க்கும் அறிவொண்ணா
மடையில்வா ளைகள்பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்
சடையில்கங்கை தரித்தானைச் சாராதார் சார்புஎன்னே.

2. அறையும்பைங் கழலார்ப்ப அரவாட அனலேந்திப்
பிறையும்கங் கையும்சூடிப் பெயர்ந்தாடும் பெருமானார்
பறையும்சங்கு ஒலிஓவாப் படிறன்தன் பனங்காட்டூர்
உறையும்எங்கள் பிரானாரை உணராதார் உணர்வுஎன்னே.

3. தண்ணார்மா மதிசூடித் தழல்போலும் திருமேனிக்கு
எண்ணார்நாள் மலர்கொண்டங்கு இசைந்தேத்தும் அடியார்கள்
பண்ணார்பா டல்அறாத படிறன்தன் பனங்காட்டூர்ப்
பெண்ணாணா யபிரானைப் பேசாதார் பேச்சென்னே.

4. நெற்றிக்கண் ணுடையானை நீறேறும் திருமேனிக்
குற்றமில் குணத்தானைக் கோணாதார் மனத்தானைப்
பற்றிப்பாம் பரையார்த்த படிறன்தன் பனங்காட்டூர்ப்
பெற்றொன்றே றும்பிரானைப் பேசாதார் பேச்சென்னே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. உரமென்னும் பொருளானை உருகில்உள் ளுறைவானைச்
சிரமென்னும் கலனானைச் செங்கண்மால் விடையானை
வரம்முன்னம் அருள்செய்வான் வன்பார்த்தான் பனங்காட்டூர்ப்
பரமன்எங் கள்பிரானைப் பரவாதார் பரவென்னே.

6. எயிலார்பொக் கம்எரித்த எண்டோள்முக் கண்இறைவன்
வெயிலாய்க்காற் றெனவீசி மின்னாய்த்தீ எனநின்றான்
மயிலார்சோ லைகள்சூழ்ந்த வன்பார்த்தான் பனங்காட்டூர்ப்
பயில்வானுக் கடிமைக்கட் பயிலாதார் பயில்வென்னே.

7. மெய்யன்வெண் பொடிபூசும் விகிர்தன்வே தமுதல்வன்
கையில்மான் மழுவேந்திக் காலன்கா லம்அறுத்தான்
பைகொள்பாம் பரையார்த்த படிறன்தன் பனங்காட்டூர்
ஐயன்எங் கள்பிரானை அறியாதார் அறிவென்னே.

8. வஞ்சமற்ற மனத்தாரை மறவாத பிறப்பிலியைப்
பஞ்சிச்சீர் அடியாளைப் பாகம்வைத் துகந்தானை
மஞ்சுற்ற மணிமாட வன்பார்த்தான் பனங்காட்டூர்
நெஞ்சத்தெங் கள்பிரானை நினையாதார் நினைவென்னே.

9. மழையானும் திகழ்கின்ற மலரோன்என்று இருவர்தாம்
உழையாநின்று அவருள்க உயர்வானத்து உயர்வானைப்
பழையானைப் பனங்காட்டூர் பதியாகத் திகழ்கின்ற
குழைகாதற்கு அடிமைக்கட் குழையாதார் குழைவென்னே.

10. பாரூரும் பனங்காட்டூர்ப் பவளத்தின் படியானைச்
சீரூரும் திருவாரூர்ச் சிவன்பேர்சென் னியில்வைத்த
ஆரூரன் அடித்தொண்டன் அடியன்சொல் அடிநாய்சொல்
ஊரூரன் உரைசெய்வார் உயர்வானத் துயர்வாரே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10. திருவலம்

வேலூர் காட்பாடிக்கு அண்மையில் உள்ள இருப்புப்பாதை நிலையம். ஆற்காடு - காட்பாடி (வேலூர்) - ராணிப்பேட்டை மார்க்கத்தில் பொன்னையாறு (நிவாநதி) பாலத்தருகில் ஆலயம்

உக்கிர வடிவிலிருந்த 'தீக்காலி அம்பாளை' (ஜடாகலாபாம்பாள்) ஆதிசங்கரர் சாந்தப்படுத்தி தனுமத்யாம்பாள், வல்லாம்பிகை என அழைக்கப்படுகிறாள். அருகிலுள்ள காஞ்சனகிரி கஞ்சன் அசுரனை வெல்ல, இறைவன் நந்தியை அனுப்பியதால் நந்தி மூலவருக்கு வெளியே கிழக்கு பார்த்தமுகமாக உள்ளது. அவ்வாறு அசுரன் அழிந்தபோது அவனது நெற்றி (லலாடம்) வீழ்ந்த இடம் "லாலாபேட்டை", சிரசு வீழ்ந்த இடம் "சீகராஜபுரம்", வலக்கால் அறுபட்டு வீழ்ந்த இடம் "வடகால்", இடது கால் வீழ்ந்த இடம் "தெங்கால்", மணிக்கட்டு வீழ்ந்த இடம் "மணியம்பட்டு", மார்பு வீழ்ந்த இடம் "குகையநல்லூர்" எனத் திருவலத்திற்கு 3 கி.மீ. தொலைவில் இன்றும் அப்பெயர்களால் ஊர்கள் அமைந்துள்ளன. இறைவன் அவ்வசுரனுக்கும் முக்தி அருளியதாக வரலாறு.

ஞானசம்பந்தர் தேவாரம் 1.113
(பண்: வியாழக்குறிஞ்சி; ராகம்: சௌராஷ்டிரம்)

திருச்சிற்றம்பலம்

1. எரித்தவன் முப்புரம் எரியில்மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்சடைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறுவேறு
தெரித்தவன் உறைவிடம் திருவல்லமே.

2. தாயவன் உலகுக்குத் தன்னொப்பிலாத்
தூயவன் தூமதி சூடியெல்லாம்
ஆயவன் அமரர்க்கும் முனிவர்கட்கும்
சேயவன் உறைவிடம் திருவல்லமே.

3. பார்த்தவன் காமனைப் பண்பழியப்
போர்த்தவன் போதகத் தின்னுரிவை
ஆர்த்தவன் நான்முகன் தலையையன்று
சேர்த்தவன் உறைவிடம் திருவல்லமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. கொய்தஅம் மலரடி கூடுவார்தம்
மைதவழ் திருமகள் வணங்கவைத்துப்
பெய்தவன் பெருமழை உலகம்உய்யச்
செய்தவன் உறைவிடம் திருவல்லமே.

5. சார்ந்தவர்க்கு இன்பங்கள் தழைக்கும்வண்ணம்
நேர்ந்தவன் நேரிழை யோடும்கூடித்
தேர்ந்தவர் தேடுவார் தேடச்செய்தே
சேர்ந்தவன் உறைவிடம் திருவல்லமே.

6. பதைத்தெழு காலனைப் பாதமொன்றால்
உதைத்தெழு மாமுனிக் குண்மைநின்று
விதிர்த்தெழு தக்கன்தன் வேள்வியன்று
சிதைத்தவன் உறைவிடம் திருவல்லமே.

7-ஆம் செய்யுள் கிடைக்கவில்லை

8. இகழ்ந்தரு வரையினை எடுக்கலுற்றாங்கு
அகழ்ந்தவல் லரக்கனை அடர்த்தபாதம்
நிகழ்ந்தவர் நேடுவார் நேடச்செய்தே
திகழ்ந்தவன் உறைவிடம் திருவல்லமே.

9. பெரியவன் சிறியவர் சிந்தைசெய்ய
அரியவன் அருமறை அங்கமானான்
கரியவன் நான்முகன் காணவொண்ணாத்
தெரியவன் உறைவிடம் திருவல்லமே.

10. அன்றிய அமணர்கள் சாக்கியர்கள்
குன்றிய அறவுரை கூறாவண்ணம்
வென்றவன் புலனைந்தும் விளங்களங்கும்
சென்றவன் உறைவிடம் திருவல்லமே.

11. கற்றவர் திருவல்லம் கண்டுசென்று
நற்றமிழ் ஞானசம் பந்தன்சொன்ன
குற்றமில் செந்தமிழ் கூறவல்லார்
பற்றுவர் ஈசன்பொற் பாதங்களே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. திருமால்பூர்

காஞ்சியிலிருந்து 13 கி.மீ.; அரக்கோணம் - காஞ்சிபுரம் வழியிலுள்ள இரயில் நிலையம். நிலையத்தில் இறங்கி மேற்கே 5 கி.மீ. தூரம்.

சோழநாடு-காவிரி-தென்கரைத் தலமான திருவீழிமிழலை ஆலய வரலாறே இங்கும் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. ஒருகையில் தாமரை மலர்; மற்றொரு கையில் தனதொரு திருக்கண் கொண்டு மூலவருக்கு எதிரே திருமால் நின்றகோலம். பின்புறத்தில் நந்தி நின்ற திருக்கோலத்தில் உள்ளார். சக்கர தீர்த்தம்; ஹரிசக்ரபுரம் என்று ஊரின் மற்றொரு பெயர். இவை அவ்வரலாற்றை உறுதி செய்கின்றன. சந்திரன் வழிபட்ட தலம்.

மூலவர் தீண்டாத் திருமேனி. எனவே குவளை (செம்பால் செய்யப்பட்ட கவசம்) சாத்தியே அபிஷேகம் செய்யப்படுகிறது. நகரத்தார் திருப்பணியில் 1937-லும் 1989-இல் காஞ்சி காமகோடி பீடத்தாலும் சமீபகால கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. சிவ-விஷ்ணு சம்பந்தத்தால் கருடசேவை உற்சவமும் நடைபெறுகிறது.

ஞானசம்பந்தர் தேவாரம் 1.055 (இரண்டு பதிகங்கள்)
(பண்: பழந்தக்கராகம்; ராகம்: ஆரபி/சுத்த தன்யாசி)

திருச்சிற்றம்பலம்

1. ஊறி யார்தரு நஞ்சினை உண்டுமை
நீறு சேர்திரு மேனியர்
சேறு சேர்வயல் தென்திரு மாற்பேற்றின்
மாறி லாமணி கண்டரே.

2. தொடையார் மாமலர் கொண்டிரு போதும்மை
அடைவார் ஆமடி கள்ளன
மடையார் நீர்மல்கு மன்னிய மாற்பே
றுடையீ ரேயுமை யுள்கியே.

3. பையா ரும்அர வங்கொடு வாட்டிய
கையா னென்று வணங்குவர்
மையார் நஞ்சுண்டு மாற்பேற் றிருக்கின்ற
ஐயா நின்அடி யார்களே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. சால மாமலர் கொண்டு சரண்என்று
மேலை யார்கள் விரும்புவர்
மாலி னார்வழி பாடுசெய் மாற்பேற்று
நீல மார்கண்ட நின்னையே.

5. மாறி லாமணி யேயென்று வானவர்
ஏற வேமிக ஏத்துவர்
கூற னேகுல வும்திரு மாற்பேற்றின்
நீற னேயென்று(ம்) நின்னையே.

6. உரையா தாரில்லை யொன்று(ம்)நின் தன்மையைப்
பரவா தாரில்லை நாள்களும்
திரையார் பாலியின் தென்கரை மாற்பேற்று
அரையா னேயருள் நல்கிடே.

7-ம் செய்யுள் கிடைக்கவில்லை

8. அரச ளிக்கும் அரக்கன் அவன்தனை
உரைகெ டுத்தவன் ஒல்கிட
வரமி குத்தளம் மாற்பேற் றடிகளைப்
பரவி டக்கெடும் பாவமே.

9. இருவர் தேவரும் தேடித் திரிந்தினி
ஒருவ ராலறி வொண்ணிலன்
மருவு நீள்கழல் மாற்பேற் றடிகளைப்
பரவு வார்வினை பாறுமே.

10. தூசு போர்த்துழல் வார்கையில் துற்றுணும்
நீசர் தம்முரை கொள்ளெலும்
தேசம் மல்கிய தென்திரு மாற்பேற்றின்
ஈசன் என்றெடுத் தேத்துமே.

11. மன்னி மாலொடு சோமன் பணிசெய்யும்
மன்னு மாற்பேற் றடிகளை
மன்னு காழியுள் ஞானசம் பந்தன்சொல்
பன்ன வேவினை பாறுமே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பர் தேவாரம் 6.080 (மூன்று பதிகங்கள்)
(திருத்தாண்டகம்; ராகம்: ஹரிகாம்போதி)

திருச்சிற்றம்பலம்

1. பாரானைப் பாரினது பயனா னானைப்
படைப்பாகிப் பல்லுயிர்க்கும் பரிவோன் தன்னை
ஆராத இன்னமுதை அடியார் தங்கட்கு
அனைத்துலகும் ஆனானை அமரர் கோனைக்
காராரும் கண்டனைக் கயிலை வேந்தைக்
கருதுவார் மனத்தானைக் காலற் செற்ற
சீரானைச் செல்வனைத் திருமாற் பேற்றுஎம்
செம்பவளக் குன்றினைச்சென்று அடைந்தேன் நானே.

2. விளைக்கின்ற நீராகி வித்தும் ஆகி
விண்ணோடு மண்ணாகி விளங்கு செம்பொன்
துளைக்கின்ற துளையாகிச் சோதி யாகித்
தூண்டரிய சுடராகித் துளக்கில் வான்மேல்
முளைக்கின்ற கதிர்மதியும் அரவும் ஒன்றி
முழங்கொலிநீர்க் கங்கையொடு மூவாது என்றும்
திளைக்கின்ற சடையானைத் திருமாற் பேற்றுஎம்
செம்பவளக் குன்றினைச்சென்று அடைந்தேன் நானே.

3. மலைமகள்தம் கோன்அவனை மாநீர் முத்தை
மரகதத்தை மாமணியை மல்கு செல்வக்
கலைநிலவு கையானைக் கம்பன் தன்னைக்
காண்பினிய செழுஞ்சுடரைக் கனகக் குன்றை
விலைபெரிய வெண்ணீற்று மேனி யானை
மெய்யடியார் வேண்டுவதே வேண்டு வானைச்
சிலைநிலவு கரத்தானைத் திருமாற் பேற்றுஎம்
செம்பவளக் குன்றினைச்சென்று அடைந்தேன் நானே.

4. உற்றானை உடல்தனக்குஓர் உயிர் ஆனானை
ஓங்காரத்து ஒருவனைஅங்கு உமையோர் பாகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெற்றானைப் பிஞ்ஞகனைப் பிறவா தானைப்
பெரியனவும் அரியனவும் எல்லாம் முன்னே
கற்றானைக் கற்பனவும் தானே யாய
கச்சியே கம்பனைக் காலன் வீழச்
செற்றானைத் திகழொளியைத் திருமாற் பேற்றுஎம்
செம்பவளக் குன்றினைச்சென்று அடைந்தேன் நானே.

5. நீறாகி நீறுமிழும் நெருப்பு மாகி
நினைவாகி நினைவினிய மலையான் மங்கை
கூறாகிக் கூற்றாகிக் கோளு மாகிக்
குணமாகிக் குறையாத உவகைக் கண்ணீர்
ஆறாத ஆனந்தத்து அடியார் செய்த
அனாசாரம் பொறுத்தருளி அவர்மேல் என்றும்
சீறாத பெருமானைத் திருமாற் பேற்றுஎம்
செம்பவளக் குன்றினைச்சென்று அடைந்தேன் நானே.

6. மருவினிய மறைப்பொருளை மறைக்காட் டானை
மறப்பிலியை மதியேந்து சடையான் தன்னை
உருநிலவும் ஒண்சுடரை உம்ப ரானை
உரைப்பினிய தவத்தானை உலகின் வித்தைக்
கருநிலவு கண்டனைக் காளத் தியைக்
கருதுவார் மனத்தானைக் கல்வி தன்னைச்
செருநிலவு படையானைத் திருமாற் பேற்றுஎம்
செம்பவளக் குன்றினைச்சென்று அடைந்தேன் நானே.

7. பிறப்பானைப் பிறவாத பெருமை யானைப்
பெரியானை அரியானைப் பெண்ஆண் ஆய
நிறத்தானை நின்மலனை நினையா தாரை
நினையானை நினைவோரை நினைவோன் தன்னை
அறத்தானை அறவோனை ஐயன் தன்னை
அண்ணல்தனை நண்ணரிய அமரர் ஏத்தும்
திறத்தானைத் திகழொளியைத் திருமாற் பேற்றுஎம்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தேன் நானே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. வானகத்தில் வளர்முகிலை மதியம் தன்னை
வணங்குவார் மனத்தானை வடிவார் பொன்னை
ஊனகத்தில் உறுதுணையை உலவா தானை
ஒற்றியூர் உத்தமனை ஊழிக் கன்றைக்
கானகத்துக் கருங்களிற்றைக் காளத் தியைக்
கருதுவார் கருத்தானைக் கருவை மூலத்
தேனகத்தில் இன்சுவையைத் திருமாற் பேற்றுஎம்
செம்பவளக் குன்றினைச்சென்று அடைந்தேன் நானே.

9. முற்றாத முழுமுதலை முளையை மொட்டை
முழுமலரின் மூர்த்தியை முனியாது என்றும்
பற்றுஆகிப் பல்லுயிர்க்கும் பரிவோன் தன்னைப்
பராபரனைப் பரஞ்சுடரைப் பரிவோர் நெஞ்சில்
உற்றானை உயர்கருப்புச் சிலையோன் நீறாய்
ஒள்அழல்வாய் வேவவுறு நோக்கத் தானைச்
செற்றானைத் திரிபுரங்கள் திருமாற் பேற்றுஎம்
செம்பவளக் குன்றினைச்சென்று அடைந்தேன் நானே.

10. விரித்தானை நான்மறையோடு அங்கம் ஆறும்
வெற்புஎடுத்த இராவணனை விரலால் ஊன்றி
நெரித்தானை நின்மலனை அம்மான் தன்னை
நிலாநிலவு செஞ்சடைமேல் நிறைநீர்க் கங்கை
தரித்தானைச் சங்கரனைச் சம்பு தன்னைத்
தரியலர்கள் புரமூன்றும் தழல்வாய் வேவச்
சிரித்தானைத் திகழொளியைத் திருமாற் பேற்றுஎம்
செம்பவளக் குன்றினைச்சென்று அடைந்தேன் நானே.

திருச்சிற்றம்பலம்

	தொண்டை நாட்டுத் தலங்கள் (தல வரிசையின்படி)	இறைவர்	இறைவியார்
6	குரங்கணில்முட்டம்	வாலீஸ்வரர்	இறையார் வளையம்மை
7	மாகறல்	திருமாகறலீஸ்வரர்	திரிபுவனநாயகி
8	திருவோத்தூர்	வேதபுரீஸ்வரர்	பாலகுஜாம்பிகை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. தக்கோலம்

காஞ்சியிலிருந்து 30 கி.மீ. இருப்புப்பாதை நிலையம்; சென்னை, காஞ்சி, அரக்கோணத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது.

தக்கன் (தக்ஷ பிராஜாபதி) தனக்கு அழிவு வரும் நிலையைக் கண்டு ஓலமிட்டதால் 'தக்கன் ஓலம்' மருவி 'தக்கோலம்'. நந்தியின் வாயினின்று தண்ணீர் விழுந்து கொண்டிருந்ததால் திருஊறல். மூலவர் பிருதிவி (மணல்) லிங்கம்; தீண்டாத்திருமேனி. ஆவுடையாருக்கு மட்டுமே அபிஷேகம். சித்தாந்த சரபம் அஷ்டாவதானம் பூவை கல்யாண சுந்தர முதலியாரின் தலபுராணம் உள்ளது. தக்ஷிணாமூர்த்தியின் சிறப்பு அம்சத்தால் வியாழக்கிழமை பூஜை சிறப்பு.

ஞானசம்பந்தர் தேவாரம் 1.106
(பண்: வியாழக்குறிஞ்சி; ராகம்: சௌராஷ்டிரம்)

திருச்சிற்றம்பலம்

1. மாறில் அவுணரரணம் மவைமாயவோர் வெங்கணையா லன்று
நீறெழ எய்தவெங்கள் நிமலன் இடம்வினவில்
தேறல் இரும்பொழிலும் திகழ்செங்கயல் பாய்வயலும் சூழ்ந்த
ஊறல் அமர்ந்தபிரான் ஒலியார்கழல் உள்குதுமே.

2. மத்த மதக்கரியை மலையான்மகள் அஞ்சவன்று கையால்
மெத்த உரித்தவெங்கள் விமலன் விரும்புமிடம்
தொத்தல ரும்பொழில்சூழ் வயல்சேர்ந்தொளிர் நீலம்நாளும் நயனம்
ஒத்தல ருங்கழனித் திருவூறலை உள்குதுமே.

3. ஏன் மருப்பினொடும் எழிலாமையும் பூண்டழகார் நன்றும்
கானமர் மான்மறிக்கைக் கடவுள் கருதுமிடம்
வான மதிதடவும் வளர்சோலைகள் சூழ்ந்தழகார் நம்மை
ஊனம் அறுத்தபிரான் திருவூறலை உள்குதுமே.

4. நெய்யணி மூவிலைவேல் நிறைவெண்மழு வும்மனலும் அன்று
கையணி கொள்கையினான் கடவுள் ளிடம்வினவின்
மையணி கண்மடவார் பலர்வந் திறைஞ்சமன்னி நம்மை
உய்யும் வகைபுரிந்தான் திருவூறலை உள்குதுமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. எண்டிசை யோர்மகிழ எழில்மாலையும் போனகமும் பண்டு
சண்டி தொழவளித்தான் அவன்றாழும் இடம்வினவில்
கொண்டல்கள் தங்குபொழில் குளிர்பொய்கை கள்சூழ்ந்து நஞ்சை
உண்டபி ரானமருந் திருவூறலை உள்குதுமே.

6-ஆம் செய்யுள் கிடைக்கவில்லை

7. கறுத்த மனத்தினொடும் கடுங்காலன்வந் தெய்துதலுங் கலங்கி
மறுக்குறும் மாணிக்கருள மகிழ்ந்தானிடம் வினவில்
செறுத்தெழு வாளரக்கன் சிரந்தோளும் மெய்யுந்நெரிய அன்று
ஒறுத்தருள் செய்தபிரான் திருவூறலை உள்குதுமே.

8. நீரின் மிசைத்துயின்றோன் நிறைநான் முகனும்மறியாது அன்று
தேரும் வகைநிமிர்ந்தான் அவன்சேரும் இடம்வினவில்
பாரின் மிசையடியார் பலர்வந் திறைஞ்சமகிழ்ந்து ஆகம்
ஊரும் அரவசைத்தான் திருவூறலை உள்குதுமே.

9. பொன்னியல் சீவரத்தார் புளித்தட்டையர் மோட்டமணர் குண்டர்
என்னும் இவர்க்கருளா ஈசன் இடம்வினவில்
தென்னென வண்டினங்கள் செறியார்பொழில் சூழ்ந்தழகார் தன்னை
உன்ன வினைகெடுப்பான் திருவூறலை உள்குதுமே.

10. கோட லிரும்புறவில் கொடிமாடக் கொச்சையர்மன் மெச்ச
ஓடு புனல்சடைமேல் கரந்தான் திருவூறல்
நாட லரும்புகழான் மிகுஞானசம் பந்தன்சொன்ன நல்ல
பாடல்கள் பத்தும்வல்லார் பரலோகத்து இருப்பாரே.

திருச்சிற்றம்பலம்

	தொண்டை நாட்டுத் தலங்கள் (தல வரிசையின்படி)	இறைவர்	இறைவியார்
9	திருப்பனங்காடு	தாளபுரீஸ்வரர் கிருபாநாதேஸ்வரர்	அமிர்தவல்லி கிருபாநாயகி
10	திருவலம்	வில்வநாதீஸ்வரர்	தனுமத்யாம்பாள்
11	திருமால்பூர்	மணிகண்டீஸ்வரர்	அஞ்சனாட்சி
12	தக்கோலம்	ஜலநாதீஸ்வரர்	கிரிராஜ கன்னிகாம்பாள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. எலுமியங்கோட்டூர்

சென்னையிலிருந்தும், காஞ்சியிலிருந்தும் 'செல்லம்பட்டிடை' சென்று, அங்கிருந்து 1 கி.மீ-இல் உள்ள இத்திருக்கோயிலை அடையலாம்.

தேவலோக நடனமாது அரம்பை வழிபட்ட தலம்; ரம்பையங்கோட்டூர் மருவி எலுமியங்கோட்டூர் என்றாயிற்று.

இத்தல தக்ஷிணாமூர்த்தி மிகவும் கீர்த்தியுடையவர். இறைவன், பாலனாக-முதியவராக வந்து இக்கோயிலை உணர்த்தியும் அடியார்கள் உணராததால், பசுவாக வந்து ஞானசம்பந்தரின் சிவிகையை முட்டி இத்தலத்தை அவருக்குக் காட்டியருளினார். இக்குறிப்பே இத்தலத்துப் பதிகத்தில் 3வது பாடலில் சொல்லப்பட்டுள்ளது. மூலவர் 16 பட்டையுடன் கூடிய அழகிய லிங்கத் தீண்டாத் திருமேனி; வெளிர் நிறமுடைய, செம்மண் நிறத்தில் உள்ளது. பெரிய ஆவுடையார்; அடிப்பாகம் பத்மம் போன்ற அமைப்பில் உள்ளது.

இத்தலத்துப் பதிகத்தில் ஞானசம்பந்தர் "எனதுரை தனதுரையாக" என்ற தொடரை, பாடல்தொறும் அமைத்துப் பாடியுள்ளது கவனிக்கத் தக்கது.

ஞானசம்பந்தர் தேவாரம் 1.076
(பண்: குறிஞ்சி; ராகம்: ஹரிகாம்போதி)

திருச்சிற்றம்பலம்

1. மலையினார் பருப்பதம் துருத்திமாற் பேறு
 மாசிலாச் சீர்மறைக் காடுநெய்த் தானம்
 நிலையினான் எனதுரை தனதுரை யாக
 நீறணிந் தேறுகந்து ஏறிய நிமலன்
 கலையினார் மடப்பிணை துணையொடும் துயிலக்
 கானலம் பெடைபுல்கிக் கணமயி லாலும்
 இலையினார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்
 இருக்கையாப் பேணியென் எழில்கொள்வ தியல்பே.

2. திருமலர்க் கொன்றையான் நின்றியூர் மேயான்
 தேவர்கள் தலைமகன் திருக்கழிப் பாலை
 நிருமலன் எனதுரை தனதுரை யாக
 நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருமலர்க் கமழ்சுனை நீள்மலர்க் குவளை
கதிர்முலை இளையவர் மதிமுகத் துலவும்
இருமலர்த் தண்பொய்கை இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணியென் எழில்கொள்வ தியல்பே.

3. பாலனாம் விருத்தனாம் பசுபதி தானாம்
பண்டுவெங் கூற்றுதைத் தடியவர்க் கருளும்
காலனாம் எனதுரை தனதுரை யாகக்
கனலெரி அங்கையில் ஏந்திய கடவுள்
நீலமா மலர்ச்சுனை வண்டுபண் செய்ய
நீர்மலர்க் குவளைகள் தாதுவிண் டோங்கும்
ஏலம்நா றும்பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணியென் எழில்கொள்வ தியல்பே.

4. உளங்கொள்வார் உச்சியார் கச்சியே கம்பன்
ஒற்றியூர் உறையும்அண் ணாமலை அண்ணல்
விளம்புவான் எனதுரை தனதுரை யாக
வெள்ளநீர் விரிசடைத் தாங்கிய விமலன்
குளம்புறக் கலைதுள மலைகளும் சிலம்பக்
கொழுங்கொடி எழுந்தெங்கும் கூவிளம் கொள்ள
இளம்பிறை தவழ்பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணியென் எழில்கொள்வ தியல்பே.

5. தேனுமாய் அமுதமாய்த் தெய்வமும் தானாய்த்
தீயொடு நீருடன் வாயுவாம் தெரியில்
வானுமாம் எனதுரை தனதுரை யாக
வரிஅரா அரைக்கசைத் துழிதரு மைந்தன்
கானமான் வெருவுறக் கருவிரல் ஊகம்
கடுவனோ டுகளும்ஊர் கற்கடும் சாரல்
ஏனமான் உழிதரும் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணியென் எழில்கொள்வ தியல்பே.

6. மனமுலாம் அடியவர்க் கருள்புரி கின்ற
வகையலாற் பலிதிரிந் துண்பிலான் மற்றோர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தனமிலான் எனதுரை தனதுரை யாகத்
        தாழ்சடை இளமதி தாங்கிய தலைவன்
புனமெலாம் அருவிகள் இருவிசேர் முத்தம்
        பொன்னொடு மணிகொழித் தீண்டிவந் தெங்கும்
இனமெலாம் அடைகரை இலம்பையங் கோட்டூர்
        இருக்கையா பேணியென் எழில்கொள்வ தியல்பே.

7. நீருளான் தீயுளான் அந்தரத் துள்ளான்
        நினைப்பவர் மனத்துளான் நித்தமா ஏத்தும்
ஊருளான் எனதுரை தனதுரை யாக
        ஒற்றைவெள் ளேறுகந் தேறிய வொருவன்
பாருளார் பாடலோடு ஆடல் அறாத
        பண்முரன் றஞ்சிறை வண்டினம் பாடும்
ஏருளார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்
        இருக்கையாப் பேணியென் எழில்கொள்வ தியல்பே.

8. வேருலாம் ஆழ்கடல் வருதிரை இலங்கை
        வேந்தன தடக்கைகள் அடர்த்தவன் உலகில்
ஆருலாம் எனதுரை தனதுரை யாக
        ஆகமோர் அரவணிந்து உழிதரும் அண்ணல்
வாருலா நல்லன மாக்களும் சார
        வாரணம் உழிதரும் மல்லலம் கானல்
ஏருலாம் பொழிலணி இலம்பையங் கோட்டூர்
        இருக்கையாப் பேணியென் எழில்கொள்வ தியல்பே.

9. கிளர்மழை தாங்கினான் நான்முகம் உடையோன்
        கீழடி மேல்முடி தேர்ந்துஅளக் கில்லா
உளமழை யெனதுரை தனதுரை யாக
        வொள்ளழல் அங்கையில் ஏந்திய வொருவன்
வளமழை யெனக்கழை வளர்துளி சோர
        மாசுண முழிதரு மணியணி மாலை
இளமழை தவழ்பொழில் இலம்பையங் கோட்டூர்
        இருக்கையாப் பேணியென் எழில்கொள்வ தியல்பே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10. உரிஞ்சன கூறைகள் உடம்பின ராகி
உழிதரு சமணரும் சாக்கியப் பேய்கள்
பெருஞ்செல்வன் எனதுரை தனதுரை யாகப்
பெய்பலிக் கென்றுழல் பெரியவர் பெருமான்
கருஞ்சினை முல்லைநன் பொன்னடை வேங்கை
களிமுக வண்டொடு தேன்இனம் முரலும்
இருஞ்சுனை மல்கிய இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணியென் எழில்கொள்வ தியல்பே.

11. கந்தனை மலிகனை கடலொலி ஓதம்
கானலம் கழிவளர் கழுமலம்என்னும்
நந்தியார் உறைபதி நால்மறை நாவன்
நற்றமிழ்க் கின்துணை ஞானசம் பந்தன்
எந்தையார் வளநகர் இலம்பையங் கோட்டூர்
இசையொடு கூடிய பத்தும்வல் லார்போய்
வெந்துயர் கெடுகிட விண்ணவ ரோடும்
வீடுபெற் றிம்மையின் வீடெளி தாமே.

திருச்சிற்றம்பலம்

	தொண்டை நாட்டுத் தலங்கள் (தல வரிசையின்படி)	இறைவர்	இறைவியார்
13	எலுமியங்கோட்டூர்	தெய்வநாயகேஸ்வரர்	கனககுசாம்பிகை
14	திருவிற்கோலம்	திரிபுராந்தகேஸ்வரர்	திரிபுராந்தகி
15	திருவாலங்காடு	வடாரண்யேஸ்வரர்	பிரம்மராளகாம்பாள்
16	திருப்பாசூர்	வாசீஸ்வரர்	மோகனாம்பாள்
17	திருவெண்பாக்கம்	ஊன்றீஸ்வரர்	மின்னொளி அம்பாள்
18	திருக்கள்ளில்	சிவாநந்தீஸ்வரர்	ஆனந்தவல்லி
19	திருக்காளத்தி	காளஹஸ்தீஸ்வரர்	ஞானப்பிரசுன்னாம்பிகை
20	திருவொற்றியூர்	ஆதிபுரீஸ்வரர்	திரிபுரசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

14. திருவிற்கோலம் (கூவம்)

சென்னை - சுங்குவார் சத்திரம் - திருவள்ளூர் பாதையில் ஆலயம்

இறைவன், மேருமலையை வில்லாகக் (திரு+வில்+கோலம்) கொண்டதால் இப்பெயர். கூவம் ஏரிக்கரைக்கருகில் ஆலயம்.

இங்குள்ள தீர்த்தத்திற்கு 'அச்சிறுகேணி' என்றும், 'கூபாக்கினி தீர்த்தம்' என்றும் பெயர்களுண்டு. சுற்றிலும் வயல்வெளிகள் இருந்தும் இக்குளத்தில் தவளைகளே இல்லை. சுற்றிலும் உள்ள பத்து ஊர்களுக்கு இம்மூர்த்தியே குல தெய்வம்.

மூலவர் தீண்டாத் திருமேனி - சுயம்பு மூர்த்தி. பதினாறு முழ வேஷ்டி சுவாமிக்கு சார்த்தப்படுகிறது.

காளிக்கு அருள்புரிந்த நிகழ்ச்சி - 10 நாள் உற்சவம். அருகிலுள்ள பிஞ்சிவாக்கம் கிராமத்திலிருந்து பால் கொணர்ந்த பிறகே சுவாமிக்கு தினமும் 'உச்சிக்கால அபிஷேகம்' செய்யப்படுகிறது.

ஞானசம்பந்தர் தேவாரம் 3.023
(பண்: காந்தார பஞ்சமம்; ராகம்: கேதாரகௌளை)

திருச்சிற்றம்பலம்

1. உருவினார் உமையொடும் ஒன்றி நின்றதோர்
திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்
வெருவிவா னவர்தொழ வெகுண்டு நோக்கிய
செருவினான் உறைவிடம் திருவிற் கோலமே.

2. சிற்றிடை உமையொரு பங்கன் அங்கையில்
உற்றதோர் எரியினன் ஒரு சரத்தினால்
வெற்றிகொள் அவுணர்கள் புரங்கள் வெந்தறச்
செற்றவன் உறைவிடம் திருவிற் கோலமே.

3. ஐயன்நல் அதிசயன் அயன்விண் ணோர்தொழும்
மையணி கண்டனார் வண்ண வண்ணம்வான்
பையர வல்குலாள் பாகம் ஆகவும்
செய்யவன் உறைவிடம் திருவிற் கோலமே.

4. விதைத்தவன் முனிவருக்கு அறமுன் காலனை
உதைத்தவன் உயிரிழந்து உருண்டு வீழ்தரப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புதைத்தவன் நெடுநகர்ப் புரங்கள் மூன்றையும்
சிதைத்தவன் உறைவிடம் திருவிற் கோலமே.

5. முந்தினான் மூவருள் முதல்வன் ஆயினான்
கொந்துலாம் மலர்ப்பொழில் கூகம் மேவினான்
அந்திவான் பிறையினான் அடியர் மேல்வினை
சிந்துவான் உறைவிடம் திருவிற் கோலமே.

6. தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழில் கூகம் மேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடம் திருவிற் கோலமே.

7. விரித்தவன் அருமறை விரிச டைவெள்ளம்
தரித்தவன் தரியலர் புரங்கள் ஆசற
எரித்தவன் இலங்கையர் கோன்இ டர்படச்
சிரித்தவன் உறைவிடம் திருவிற் கோலமே.

8-ஆம் செய்யுள் கிடைக்கவில்லை

9. திரிதரு புரம்எரி செய்த சேவகன்
வரியர வொடுமதி சடையில் வைத்தவன்
அரியொடு பிரமன தாற்ற லால்உருத்
தெரியலன் உறைவிடம் திருவிற் கோலமே.

10. சீர்மையில் சமணொடு சீவ ரக்கையர்
நீர்மையில் உரைகள்கொள் ளாத நேசர்க்குப்
பார்மலி பெருஞ்செல்வம் பரிந்து நல்கிடும்
சீர்மையி னான்இடம் திருவிற் கோலமே.

11. கோடல்வெண் பிறையனைக் கூகம் மேவிய
சேடன செழுமதில் திருவிற் கோலத்தை
நாடவல் லதமிழ் ஞானசம் பந்தன
பாடல்வல் லார்களுக்கு இல்லை பாவமே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அருள்மிகு திருமேற்றளீஸ்வரர் திருக்கோயில், கச்சி மேற்றளி

அருள்மிகு ஓணகாந்தேஸ்வரர் திருக்கோயில், ஓணகாந்தன்தளி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள்மிகு அனேகதங்காவதேஸ்வரர் திருக்கோயில்,
கச்சி அனேகதங்காவதம்

அருள்மிகு சத்தியவிரதேஸ்வரர் திருக்கோயில்,
கச்சிநெறிக்காரைக்காடு (திருக்காலிமேடு)

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள்மிகு வாலீஸ்வரர் திருக்கோயில், குரங்கணில்முட்டம்



அருள்மிகு திருமாகறலீஸ்வரர் திருக்கோயில், திருமாகறல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், திருவோத்தூர் (செய்யாறு)

அருள்மிகு தாளபுரீஸ்வரர் திருக்கோயில், திருப்பனங்காடு

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள்மிகு வில்வநாதேஸ்வரர் திருக்கோயில், திருவலம்

அருள்மிகு மணிகண்டீஸ்வரர் திருக்கோயில், திருமால்பூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள்மிகு ஜலநாதீஸ்வரர் திருக்கோயில், தக்கோலம்

அருள்மிகு தெய்வநாயகேஸ்வரர் திருக்கோயில், எலுமியங்கோட்டூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள்மிகு திரிபுராந்தகேஸ்வரர் திருக்கோயில், திருவிற்கோலம்

அருள்மிகு வாசீஸ்வரர் திருக்கோயில், திருப்பாசூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள்மிகு ஊன்றீஸ்வரர் திருக்கோயில், திருவெண்பாக்கம் (பூண்டி)



அருள்மிகு சிவாநந்தீஸ்வரர் திருக்கோயில், திருக்கள்ளில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15. திருவாலங்காடு

சென்னை - அரக்கோணம் - சோளிங்கர் (திருவள்ளூர் வழி)

திருத்தணி தலத்துடன் இணைந்த தலம். பஞ்ச சபைகளில் இரத்தின சபை – நடராஜ ஊர்த்துவ தாண்டவம். காரைக்கால் அம்மையார் (11-ஆம் திருமுறை) கயிலையிலிருந்து வந்து தாண்டவ தரிசனம் பெற்ற தலம். மிகப் பெரிய குளம் – முக்தி தீர்த்தம். கூழாண்டார் கோத்திரம் - தாங்கள் கூழ் உண்டு, விளையும் நெல்லை இறைவனுக்குச் சமர்ப்பித்தவர்கள். இப்பழையனூர் வேளாளர்கள் எழுபது பேர் தீப்பாய்ந்து செட்டிப் பிள்ளைக்குத் தந்த வாக்குறுதியை நிறைவேற்றினர். இதற்கான நினைவு மண்டபமும் உள்ளது. இவ்வம்சத்தினர் தினமும் ஆலய தரிசனம் செய்வது இன்றும் தொடர்கிறது. ஞானசம்பந்தரை இறைவன் கனவில் அழைத்துப் பாடல் பெற்ற சிறப்புடைய தலம். இத்தலம் 'வடாரண்யம்' எனவும் பெயர் பெற்றது. இறைவன் காளியுடன் நடனமாடிய தலம்.

ஞானசம்பந்தர் தேவாரம் 1.045
(பண்: தக்கராகம்; ராகம்: ஆரபி/சுத்த தன்யாசி)

திருச்சிற்றம்பலம்

1. துஞ்ச வருவாரும் தொழுவிப் பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப் பாரும் முனைநட்பாய்
வஞ்சப் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழையனூர் ஆலங் காட்டுளெம் அடிகளே.

2. கேடும் பிறவியும் ஆக்கி னாரும் கேடிலா
வீடு மாநெறி விளம்பி னாரெம் விகிர்தனார்
காடும் சுடலையும் கைக்கொாண் டெல்லிக் கணப்பேயோடு
ஆடும் பழையனூர் ஆலங் காட்டுளெம் அடிகளே

3. கந்தங் கமழ்கொன்றைக் கண்ணி சூடிக் கனலாடி
வெந்த பொடிநீற்றை விளங்கப் பூசும் விகிர்தனார்
கொந்தண் பொழிற்சோலை அரவில் தோன்றிக் கோடல்பூத்த
அந்தண் பழையனூர் ஆலங் காட்டுளெம் அடிகளே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. பால மதிசென்னி படரச் சூடிப் பழியோராக்
காலன் உயிர்செற்ற காலன் ஆய கருத்தனார்
கோலம் பொழிற் சோலைப் பெடையோடுஆடி மடமஞ்ஞை
ஆலும் பழையனூர் ஆலங் காட்டுளெம் அடிகளே.

5. ஈர்க்கும் புனல்சூடி இளவெண் திங்கள் முதிரவே
பார்க்கும் அரவம்பூண் டாடி வேடம் பயின்றாரும்
கார்க்கொள் கொடிமுல்லை குருந்தம் ஏறிக் கருந்தேன்மொய்த்து
ஆர்க்கும் பழையனூர் ஆலங் காட்டுளெம் அடிகளே.

6. பறையும் சிறுகுழலும் யாழும் பூதம் பயிற்றவே
மறையும் பலபாடி மயானத்து உறையும் மைந்தனார்
பிறையும் பெரும்புனல்சேர் சடையி னாரும் பேடைவண்டு
அறையும் பழையனூர் ஆலங் காட்டுளெம் அடிகளே.

7. நுணங்கு மறைபாடி யாடி வேடம் பயின்றாரும்
இணங்கு மலைமகளோ டிருகூ றொன்றாய் இசைந்தாரும்
வணங்கும் சிறுத்தொண்டர் வைகல் ஏத்தும் வாழ்த்தும்கேட்டு
அணங்கும் பழையனூர் ஆலங் காட்டுளெம் அடிகளே.

8. கணையும் வரிசிலையும் எரியும் கூடிக் கவர்ந்துண்ண
இணையில் எயின்மூன்றும் எரித்திட் டாரெம் இறைவனார்
பிணையும் சிறுமறியும் கலையு மெல்லாம் கங்குல்சேர்ந்து
அணையும் பழையனூர் ஆலங் காட்டுளெம் அடிகளே.

9. கவிழ மலைதரளக் கடகக் கையால் எடுத்தான்தோள்
பவழ நுனைவிரலால் பைய வூன்றிப் பரிந்தாரும்
தவழும் கொடிமுல்லை புறவம் சேர நறவம்பூத்து
அவிழும் பழையனூர் ஆலங் காட்டுளெம் அடிகளே

10. பகலும் இரவும்சேர் பண்பி னாரும் நண்போராது
இகலும் இருவர்க்கும் எரியாய்த் தோன்றி நிமிர்ந்தாரும்
புகலும் வழிபாடு வல்லார்க் கென்றுந் தீயபோய்
அகலும் பழையனூர் ஆலங் காட்டுளெம் அடிகளே.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. போழும் பலபேசிப் போதுசாற்றித் திரிவாரும்
வேழம் வருமளவும் வெயிலே துற்றித் திரிவாரும்
கேழல் வினைபோகக் கேட்பிப் பாரும் கேடிலா
ஆழ்வர் பழையனூர் ஆலங் காட்டுளெம் அடிகளே.

12. சாந்தம் கமழ்மறுகில் சண்பை ஞான சம்பந்தன்
ஆந்தண் பழையனூர் ஆலங் காட்டுளெம் அடிகளை
வேந்தன் அருளாலே விரித்த பாடல் இவைவல்லார்
சேர்ந்த இடமெல்லாம் தீர்த்த மாகச் சேர்வாரே.

திருச்சிற்றம்பலம்

அப்பர் தேவாரம் 4.068 (திருநேரிசை)
(இரண்டு பதிகங்கள்)

திருச்சிற்றம்பலம்

1. வெள்ளநீர்ச் சடையர் போலும் விரும்புவார்க் கெளியர் போலும்
உள்ளுளே உருகி நின்றங்கு உகப்பவர்க் கன்பர் போலும்
கள்ளமே வினைக ளெல்லாம் கரிசறுத் திடுவர் போலும்
அள்ளலம் பழனை மேய ஆலங்காட் டடிக ளாரே.

2. செந்தழல் உருவர் போலும் சினவிடை யுடையர் போலும்
வெந்தவெண் ணீறு கொண்டு மெய்க்கணிந் திடுவர் போலும்
மந்தமாம் பொழிற் பழனை மல்கிய வள்ளல் போலும்
அந்தமில் அடிகள் போலும் ஆலங்காட் டடிக ளாரே.

3. கண்ணினாற் காம வேளைக் கனலெழ விழிப்பர் போலும்
எண்ணிலார் புரங்கள் மூன்றும் எரியுணச் சிரிப்பர் போலும்
பண்ணினார் முழவம் ஓவாப் பைம்பொழில் பழனை மேய
அண்ணலார் எம்மை யாளும் ஆலங்காட் டடிக ளாரே.

4. காறிடு விடத்தை உண்ட கண்டரெண் தோளர் போலும்
தூறிடு சுடலை தன்னில் சுண்ணவெண் ணீற்றர் போலும்
கூறிடும் உருவர் போலும் குளிர்பொழில் பழனை மேய
ஆறிடு சடையர் போலும் ஆலங்காட் டடிக ளாரே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. பார்த்தனோ டமர் பொருது பத்திமை காண்பர் போலும்
கூர்த்தவாய் அம்பு கோத்துக் குணங்களை அறிவர் போலும்
பேர்த்துமோர் ஆவ நாழி அம்போடும் கொடுப்பர் போலும்
தீர்த்தமாம் பழனை மேய திருவாலங் காட னாரே.

6. வீட்டினார் சுடுவெண் ணீறு மெய்க்கணிந் திடுவர் போலும்
காட்டில்நின் றாடல் பேணும் கருத்தினை யுடையர் போலும்
பாட்டினார் முழவம் ஓவாப் பைம்பொழில் பழனை மேயார்
ஆட்டினார் அரவம் தன்னை ஆலங்காட் டடிக ளாரே.

7. தாளுடைச் செங்க மலத் தடங்கொள்சே வடியர் போலும்
நாளுடைக் காலன் வீழ உதைசெய்த நம்பர் போலும்
கோளுடைப் பிறவி தீர்ப்பார் குளிர்பொழில் பழனை மேய
ஆளுடை அண்ணல் போலும் ஆலங்காட் டடிக ளாரே.

8. கூடினார் உமைதன் னோடே குறிப்புடை வேடம் கொண்டு
சூடினார் கங்கை யாளைச் சுவறிடு சடையர் போலும்
பாடினார் சாம வேதம் பைம்பொழில் பழனை மேயார்
ஆடினார் காளி காண ஆலங்காட் டடிக ளாரே.

9. வெற்றரைச் சமண ரோடு விலையுடைக் கூறை போர்க்கும்
ஒற்றரைச் சொற்கள் கொள்ளார் குணங்களை உகப்பர் போலும்
பெற்றமே உகந்தங் கேறும் பெருமையை உடையர் போலும்
அற்றங்கள் அறிவர் போலும் ஆலங்காட் டடிக ளாரே.

10. மத்தனாய் மலையெ டுத்த அரக்கனைக் கரத்தோ டொல்க
ஒத்தினார் திருவி ரலால் ஊன்றியிட் டருள்வர் போலும்
பத்தர்தம் பாவம் தீர்க்கும் பைம்பொழில் பழனை மேய
அத்தனார் நம்மை ஆள்வார் ஆலங்காட் டடிக ளாரே.

திருச்சிற்றம்பலம்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுந்தரர் தேவாரம் 7.052
(பண்: பழம்பஞ்சுரம்; ராகம்: சங்கராபரணம்)

திருச்சிற்றம்பலம்

1. *முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டும் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழைய னூர்மேய
அத்தா ஆலங் காடாஉன் அடியார்க்கு அடியேன் ஆவேனே.

2. பொய்யே செய்து புறம்புறமே திரிவேன் தன்னைப் போகாமே
மெய்யே வந்திங்கு எனையாண்ட மெய்யா மெய்யர் மெய்ப்பொருளே
பையா டரவம் அரைக்கசைத்த பரமா பழைய னூர்மேய
ஐயா ஆலங் காடாஉன் அடியார்க்கு அடியேன் ஆவேனே.

3. தூண்டா விளக்கின் நற்சோதீ தொழுவார் தங்கள் துயர்தீர்ப்பாய்
பூண்டாய் எலும்பைப் புரம்மூன்றும் பொடியாச் செற்ற புண்ணியனே
பாண்டாழ் வினைகள் அவைதீர்க்கும் பரமா பழைய னூர்மேய
ஆண்டா ஆலங் காடாஉன் அடியார்க்கு அடியேன் ஆவேனே.

4. மறிநேர் ஒண்கண் மடநல்லார் வலையிற் பட்டு மதிமயங்கி
அறிவே அழிந்தேன் ஐயாநான் மையார் கண்டம் உடையானே
பறியா வினைகள் அவைதீர்க்கும் பரமா பழைய னூர்மேய
அறிவே ஆலங் காடாஉன் அடியார்க்கு அடியேன் ஆவேனே.

5. வேலங் காடு தடம்கண்ணார் வலையுள் பட்டுஉன் நெறிமறந்து
மாலங் காடி மறந்தொழிந்தேன் மணியே முத்தே மரகதமே
பாலங் காடி நெய்யாடி படர்புன் சடையாய் பழையனூர்
ஆலங் காடா உன்னுடைய அடியார்க்கு அடியேன் ஆவேனே.

6. எண்ணார் தங்கள் எயிலெய்த எந்தாய் எந்தை பெருமானே
கண்ணாய் உலகம் காக்கின்ற கருத்தா திருத்தல் ஆகாதாய்

---

* முருகனார் இயற்றியுள்ள சந்நிதிமுறையில் எட்டு தலைப்புகள் சுந்தரரது இப்பதிகப் பண் ராகத்தைத் தழுவியவை. தலைப்புக்கொரு பாடலாக இப்பதிக இறுதியில் அவை கொடுக்கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பண்ணார் இசைகள் அவைகொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்
அண்ணா ஆலங் காடாஉன் அடியார்க்கு அடியேன் ஆவேனே.

7. வண்டார் குழலி உமைநங்கை பங்கா கங்கை மணவாளா
விண்டார் புரங்கள் எரிசெய்த விடையாய் வேத நெறியானே
பண்டாழ் வினைகள் பலதீர்க்கும் பரமா பழைய னூர்மேய
அண்டா ஆலங் காடாஉன் அடியார்க்கு அடியேன் ஆவேனே.

8. பேழ்வாய் அரவின் அணையானும் பெரிய மலர்மேல் உறைவானும்
தாழா துன்றன் சரண்பணியத் தழலாய் நின்ற தத்துவனே
பாழாம் வினைகள் அவைதீர்க்கும் பரமா பழையனூர் தன்னை
ஆள்வாய் ஆலங் காடாஉன் அடியார்க்கு அடியேன் ஆவேனே.

9. எம்மான் எந்தை மூத்தப்பன் ஏழேழ் படிகால் எமையாண்ட
பெம்மான் ஈமப் புறங்காட்டில் பேயோ டாடல் புரிவானே
பன்மா மலர்கள் அவைகொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்
அம்மா ஆலங் காடாஉன் அடியார்க்கு அடியேன் ஆவேனே.

10. பத்தர் சித்தர் பலரேத்தும் பரமன் பழைய னூர்மேய
அத்தன் ஆலங் காடன்தன் அடிமைத் திறமே அன்பாகிச்
சித்தர் சித்தம் வைத்தபுகழ்ச் சிறுவன் ஊரன் ஒண்தமிழ்கள்
பத்தும் பாடி ஆடுவார் பரமன் அடியே பணிவாரே.

திருச்சிற்றம்பலம்

குழைத்த பத்து

தலைப்பு 46

திருச்சிற்றம்பலம்

1. அழகா அடியேன் விழிகட்கோர் விழவா விழுச்சீர் அழகம்மை
மழவா விழியான் மாணடியார் மருமப் புலத்தை மடித்துழும்பேர்
உழவா ஒழியா வேங்கடவா ஊழி செலினும் உலப்பில்லாக்
குழகா உனக்கே என்நெஞ்சம் குழைத்தேன் குழைத்தேன் குழைத்தேனே.

திருச்சிற்றம்பலம்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரார்த்தனைப் பதிகம்

தலைப்பு 47

திருச்சிற்றம்பலம்

1. கடலுள் படிந்த உப்பு அந்தக் கடல்நீர் மயமாக் கரைவதுபோல்
உடலுள் கிடந்தேன் உன்னருள்பேர் ஒளியுள் படிந்துஅவ் ஒளிமயமா
கிடலுக்கு வந்தேன் யானெனது என்ற இரண்டும் கெட்டுஉன் இயல்பாம்மெய்
உடலுற்று ஒளிர உதவுதி நீ உணவாய் என்னை உட்கொண்டே.

திருச்சிற்றம்பலம்

யாத்திரைப் பத்து

தலைப்பு 70

திருச்சிற்றம்பலம்

1. அவலோ கனத்தால் அடியோங்கள் அடிப்புன் குடில்கள் அழிவித்துத்
தவலா வாய்மைத் தற்பதமே தயவாய்த் தந்தான் வேங்கடவன்
கவலோம் அவலக் கடல்அழுந்தோம் கையாறு எய்தோம் கண்கலுழோம்
சிவலோ கத்துச் சேர்ந்தின்பம் துய்த்துச் செம்மாந் திருப்போமே.

திருச்சிற்றம்பலம்

திருவோலக்கப் பத்து

தலைப்பு 77

திருச்சிற்றம்பலம்

1. சூளோது இருவர் துறுமண்விண் தொட்டும் பறந்தும் உன துதிருத்
தாளோ தலையோ தாமொன்றும் சற்றுங் காணாது அழிவாரால்
வேளோ னாகம் வெண்ணீறா விழித்த நுதல்கண் வேங்கடநின்
நாள்ஓ லக்கம் சேவிக்க நயக்கின் றாள்என் மடமகளே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வண்டுவிடு தூது

தலைப்பு 81

திருச்சிற்றம்பலம்

1. காமங் கதுவிக் கைகடந்தேன் கங்குல் போழ்தில் கலந்ததுதான்
ஊமன் கண்ட கனவாகி உள்ளே உயங்கி உலைகின்றேன்
ஆமை போல ஐந்தடக்கும் அடல்வேங் கடனை அடிச்சியேன்
மாமை கவர்ந்த மாயோனை அழைத்து வாரும் வண்டீரே.

திருச்சிற்றம்பலம்

ஆனந்த மாலை

தலைப்பு 84

திருச்சிற்றம்பலம்

1. நலியா நின்றேன் நல்லுயிர்தீ நஞ்சுண் டாற்போல் உயங்கிப்போய்
மெலியா நின்றேன் வேங்கடவா வீத சோகா நின்னடியார்
சலியாது என்றும் தவஞ்செய்யக் கண்டும் அவஞ்செய் சதிகாரக்
கலியேன் உன்தன் சிவானந்தக் கடல்வாய் என்றோ கலப்பதுவே.

திருச்சிற்றம்பலம்

திருச்சதகம் — அநுபோக சுத்தி

தலைப்பு 94-6

திருச்சிற்றம்பலம்

1. தக்க மாட்சி சற்றும்இலாச் சழக்க னேனை ஆண்டாய்க்குத்
தக்க வாறு தக்கிருக்க கில்லேன் தலைவா தையலர்தாம்
நக்க வாறு நகில்துகில்போய் நழுவு மாறும் நச்சுவிழி
சொக்கு மாறும் இவையோர்ந்து சூதுஎன் தனக்கே சூழ்ந்தேனே.

திருச்சிற்றம்பலம்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறும்பூதுப் பத்து

தலைப்பு 118

திருச்சிற்றம்பலம்

1. பாரும் கனலும் பைம்புனலும் பவனத் தோடு பெருவானும்
ஊருஞ் சுடர்கள் ஓரிரண்டும் உணர்வுக் கிடனாம் இயமானும்
தேருங் காலை இவையாவும் திருவேங் கடவா நீஆதி
யாரும் காணப் படாய்ஈதுஓர் இறும்பூது இருந்த வாறென்னே.

திருச்சிற்றம்பலம்

பழையனூர் திருவாலங்காடு தொடர்பான வரலாற்றுச் சுருக்கம்: இங்கு நீலிகுளம், 70 வேளாளர்கள் தீப்பாய்ந்த இடம். தற்போது வரலாற்று மண்டபமும் சாட்சிநாதர் சந்நிதியுமாக உள்ளன. காஞ்சியிலிருந்த தரிசனன் என்ற வணிகன், தன் கள்ளக்காதலுக்கு இடையூறாக இருந்த தன் மனைவியைக் கொன்றுவிடவே, அவள் 'நீலி' என்ற பேயாகி வணிகனைப் பழிதீர்க்க முயன்றாள். அவன் ஒரு மந்திர வாளைக் கையிலேந்தித் தப்பி, வணிகத்தின் பொருட்டு திருவாலங்காட்டை அடுத்த பழையனூருக்கு வந்தான். நீலியும் பெண் வடிவம்தாங்கி, ஒரு கள்ளிக் கட்டையைக் குழந்தையாக்கி அவனைப் பின்தொடர்ந்துவரவும், அவன் 70 பேர்கொண்ட ஊர்ச் சபையோரிடம் சரணடைந்தான். சபையோரிடம் நீலி, "இவர் என் கணவர்; இது எங்கள் குழந்தை; நீங்கள்தான் எங்களை ஒன்றுசேர்த்து வைக்கவேண்டும்" என்று 'நீலிக்கண்ணீர்' வடித்து கையிலிருந்த குழந்தையைக் கீழிறக்கிவிட, அது 'அப்பா' என்று வணிகனைக் கட்டிக் கொண்டது. அன்றிரவு இருவரும் குழந்தையுடன் ஓர் அறையில் தங்கவும் வணிகனிடம் இருந்த வாளைச் சபையோரிடம் பத்திரப்படுத்தவும் முடிவாயிற்று. பயமடைந்த வணிகனுக்கு சபையோர், "உன் உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் எங்கள் 70 பேர் உயிர்களை அதற்கு ஈடாக்குவோம்" என்று வாக்களித்தனர். நீலிப்பேய் தனது திட்டப்படி அன்றிரவு வணிகனைக் கொன்று பழிதீர்த்து, மறைந்து விட்டது. காலையில் வணிகன் மாண்டு கிடந்ததைக் கண்ட எழுபது வேளாளர்களும் தாங்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற தீவளர்த்து அதில் மூழ்கிச் சிவபதம் அடைந்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



2500 ஆண்டுகளுக்கு முன் எழுபது வேளாளர் தீப்பாய்ந்தோர் மண்டபம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேளாளர் சத்தியம் செய்த 'சாட்சிபூதேஸ்வரர்' திருக்கோயில்



துஞ்சவருவாருந் தொழுவிப்பாரும் வழுவிப் போய்
நெஞ்சம்புகுந் தென்னை நினைவிப்பாருமுனை நட்பாய்
வஞ்சப்படுத் தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழையனூர் ஆலங்காட்டெம் மடிகளே
-திருஞானசம்பந்தர்

நற்றிறம்புரி பழையனூர்ச்சிறுத் தொண்டர் நவைவந்
துற்றபோது தம்முயிரையும் வணிகனுக்கொரு காற்
சொற்ற மெய்ம்மையுந் தூக்கியச் சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையினிகழ்ந்தது பெருந் தொண்டைநாடு
-சேக்கிழார்

மாறு கொடு பழையனூர் நீலிசெய்த வஞ்சனையால்
வணிகனுயிர் இழப்பத் தாங்கள்
கூறிய சொற் பிழையாது துணிந்து செந்தக் குழியில்
எழுபது பேரும் முழுகிக் கங்கை
யாறணி செஞ்சடைத் திருவாலங் காட்டப்பர் அண்டமுற
நிமிர்ந்தாடு நடியின் கீழ்ப்
பேறு பெறும் வேளாளர் பெருமை
திருச்சிற்றம்பலம்

ஞானசம்பந்தர், சேக்கிழார் மற்றும் உமாபதி சிவாச்சாரியாரது
'பழையனூர் நீலி கதை' குறித்த பாடல் பதிவு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16. திருப்பாசூர்

சென்னை - அரக்கோணம் (திருவாலங்காடு வழி); சென்னை - திருத்தணி (கடம்பத்தூர் அருகில்); காஞ்சி - திருவள்ளூர் (கடம்பத்தூரை அடுத்து)

(பரசு மூங்கில்). மூங்கிற்காட்டிலிருந்து வேடுவர்களால் வெளிப்படுத்தப்பட்ட இறைவன், ஆலயம் கட்டிய கரிகாலனுக்காக நந்தியை அனுப்பி பகை மன்னனுக்கு உதவிய காளியை, நந்தி விலங்கிட்ட நிகழ்ச்சி, சிற்ப வடிவில் உள்ளது.

அம்பாள் வழிபட்ட தலம். சந்திரன், திருமால் ஆகியோரும் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலுடன் இணைந்த திருக்கோயில் இஃது.

ஞானசம்பந்தர் தேவாரம் 2.060
*(பண்: காந்தாரம்; ராகம்: நவரோஸ்)

திருச்சிற்றம்பலம்

1. சிந்தை யிடையார் தலையின் மிசையார் செஞ்சொல்லார்
வந்து மாலை வைகும் போழ்தென் மனத்துள்ளார்
மைந்தர் மணாளர் என்ன மகிழ்வார் ஊர்போலும்
பைந்தண் மாதவி சோலை சூழ்ந்த பாசூரே.

2. பேரும் பொழுதும் பெயரும் பொழுதும் பெம்மான்என்று
ஆரும் தனையும் அடியார் ஏத்த அருள்செய்வார்
ஊரும் அரவம் உடையார் வாழும் ஊர்போலும்
பாரின் மிசையார் பாடல் ஓவாப் பாசூரே.

3. கையால் தொழுது தலைசாய்த்து உள்ளம் கசிவார்கண்
மெய்யார் குறையும் துயரும் தீர்க்கும் விமலனார்
நெய்யா டுதலஞ் சுடையார் நிலாவும் ஊர்போலும்
பைவாய் நாகம் கோடல் ஈனும் பாசூரே.

4. பொங்காடு அரவும் புனலும் சடைமேல் பொலிவெய்தக்
கொங்கார் கொன்றை சூடிஎன் உள்ளம் குளிர்வித்தார்

★ சந்நிதிமுறை 94-09 திருச்சதகம் (ஆனந்தப் பரவசம்) இத்தலப் பதிகத்தைத் தழுவியது. இதன் ஒரு பாடல் இப்பதிக இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

தம்கா தலியும் தாமும் வாழும் ஊர்போலும்
பைங்கான் முல்லை பல்லரும் பீனும் பாசூரே.

5. ஆடல் புரியும் ஐவா அரவொன் றரைச்சாத்தும்
சேடச் செல்வர் சிந்தையுள் என்றும் பிரியாதார்
வாடல் தலையிற் பலிதேர் கையார் ஊர்போலும்
பாடல் குயில்கள் பயில்பூஞ் சோலைப் பாசூரே.

6. கால்நின் றதிரக் கனல்வாய் நாகம் கச்சாகத்
தோலொன் றுடையார் விடையார் தம்மைத் தொழுவார்கள்
மால்கொண் டோட மையல் தீர்ப்பார் ஊர்போலும்
பால்வெண் மதிதோய் மாடம்சூழ்ந்த பாசூரே.

7. கண்ணின் அயலே கண்ணொன்று உடையார் கழலுன்னி
எண்ணும் தனையும் அடியார் ஏத்த அருள்செய்வார்
உள்நின்று உருக உவகை தருவார் ஊர்போலும்
பண்ணின் மொழியார் பாடல் ஓவாப் பாசூரே.

8. தேசு குன்றாத் தெண்ணீர் இலங்கைக் கோமானைக்
கூச அடர்த்துக் கூர்வாள் கொடுப்பார் தம்மையே
பேசிப் பிதற்றப் பெருமை தருவார் ஊர்போலும்
பாசித் தடமும் வயலும் சூழ்ந்த பாசூரே.

9. நகுவாய் மலர்மேல் அயனும் நாகத் தணையானும்
புகுவாய் அறியார் புறம்நின் றோரார் போற்றோவார்
செகுவாய் உகுபல் தலைசேர் கையார் ஊர்போலும்
பகுவாய் நாரை ஆரல் வாரும் பாசூரே.

10. தூய வெயில்நின் றுழல்வார் துவர்தோய் ஆடையர்
நாவில் வெய்ய சொல்லித் திரிவார் நயம்இல்லார்
காவல் வேவக் கணையொன் றெய்தார் ஊர்போலும்
பாவைக் குரவம் பயில்பூஞ் சோலைப் பாசூரே.

11. ஞானம் உணர்வான் காழி ஞான சம்பந்தன்
தேனும் வண்டும் இன்னிசை பாடும் திருப்பாசூர்க்
கானம் உறைவார் கழல்சேர் பாடல் இவைவல்லார்
ஊனம் இலராய் உம்பர் வானத்து உறைவாரே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பர் தேவாரம் 5.025 (2 பதிகங்கள்)
(திருக்குறுந்தொகை; ராகம்: நாதநாமக்கிரியா)

திருச்சிற்றம்பலம்

1. முந்தி மூவெயில் எய்த முதல்வனார்
சிந்திப் பார்வினை தீர்த்திடும் செல்வனார்
அந்திக் கோன்தனக் கேயருள் செய்தவர்
பந்திச் செஞ்சடைப் பாசூர் அடிகளே.

2. மடந்தை பாகம் மகிழ்ந்த மணாளனார்
தொடர்ந்த வல்வினை போக்கிடும் சோதியார்
கடந்த காலனைக் கால்கொடு பாய்ந்தவர்
படர்ந்த நாகத்தர் பாசூர் அடிகளே.

3. நாறு கொன்றையும் நாகமும் திங்களும்
ஆறும் செஞ்சடை வைத்த அழகனார்
காறு கண்டத்தர் கையதோர் சூலத்தர்
பாறி னோட்டினர் பாசூர் அடிகளே.

4. வெற்றி யூர்உறை வேதிய ராவர்நல்
ஒற்றி யேறுகந்து ஏறும் ஒருவனார்
நெற்றிக் கண்ணினர் நீளர வந்தனைப்
பற்றி ஆட்டுவர் பாசூர் அடிகளே.

5. மட்ட விழ்ந்த மலர்நெடுங் கண்ணிபால்
இட்ட வேட்கைய ராகி யிருப்பவர்
துட்ட ரேல்அறி யேன்இவர் சூழ்ச்சிமை
பட்ட நெற்றியர் பாசூர் அடிகளே.

6. பல்லில் ஓடுகை யேந்திப் பகலெலாம்
எல்லி நின்றிடு பெய்ப்பலி யேற்பவர்
சொல்லிப் போய்ப்புகும் ஊர்அறி யேன்சொலீர்
பல்கு நீற்றினர் பாசூர் அடிகளே.

7. கட்டி விட்ட சடையர் கபாலியர்
எட்டி நோக்கிவந்து இல்புகுந் தவ்வவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இட்ட மாஅறி யேன்இவர் செய்வன
பட்ட நெற்றியர் பாசூர் அடிகளே.

8. வேதம் ஓதிவந்து இல்புகுந் தாரவர்
காதில் வெண்குழை வைத்த கபாலியார்
நீதி ஒன்றறி யார்நிறை கொண்டனர்
பாதி வெண்பிறைப் பாசூர் அடிகளே.

9. சாம்பல் பூசுவர் தாழ்சடை கட்டுவர்
ஓம்பல் மூதுஎரு தேறும் ஒருவனார்
தேம்பல் வெண்மதி சூடுவர் தீயதோர்
பாம்பு மாட்டுவர் பாசூர் அடிகளே.

10. மாலி னோடு மறையவன் தானுமாய்
மேலும் கீழும் அளப்பரி தாயவர்
ஆலின் நீழல் அறம்பகர்ந் தார்மிகப்
பால்வெண் ணீற்றினர் பாசூர் அடிகளே.

11. திரியும் மூவெயில் செங்கணை யொன்றினால்
எரிய வெய்தன ரேனும் இலங்கைக்கோன்
நெரிய வூன்றியிட் டார்விரல் ஒன்றினால்
பரியர் நுண்ணியர் பாசூர் அடிகளே.

திருச்சிற்றம்பலம்

ஆனந்த பரவசம்

தலைப்பு 94-09 (கலிநிலைத்துறை; பண்: காந்தாரம்; நவரோஸ்)

திருச்சிற்றம்பலம்

1. பச்சை யொருபால் படர்ந்துஇவ் உலகம் பாலிக்கும்
செச்சைப் பெருமான் பிச்சைப் பெருமான் செங்கண்ணால்
கச்சை விசித்துக் காண்பார் தங்கள் கலிதீர்க்கும்
விச்சைப் பெருமான் விநோத ரமணப் பெருமானே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

17. திருவெண்பாக்கம் - பூண்டி (நீர்த்தேக்கம்)

(திருவள்ளூரிலிருந்து 11 கி.மீ.)

1968-இல் சென்னை குடிநீர்த் தேக்கத்திற்காக பூண்டிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஆதாரதண்டேஸ்வரர் தடித் கௌரி மின்னொளியம்மை - சுந்தரர் நிகழ்ச்சியுடன் தொடர்புடைய பெயர்கள். திருவொற்றியூர் எல்லையில் பார்வையிழந்த சுந்தரர் இங்கு பதிகம் பாடி ஊன்றுகோலைப் பெற்றார். "கண்பார்வை கேட்டால் ஊன்றுகோலா?" என்று அதை வீசியெறிந்ததில் நந்தியின் ஒருகொம்பு ஒடிந்துள்ளது. நந்தியின் அருகிலேயே மூலவரைப் பார்த்தவாறு சுந்தரர் திருமேனி நின்ற நிலையில் உள்ளது.

கண்பார்க்க வேண்டுமெனக் கண்டு ஊன்றுகோல் கொடுத்த
வெண்பாக்கத்து அன்பர் பெறும் வீறாப்பே.

- இதுபோன்ற திருவருட்பா பாடல்கள் (விண்ணப்பக் கலிவெண்பா) பாடல்பெற்ற தலங்களின் மீதுள்ள வள்ளலாரின் ஆழ்ந்த பக்தியைப் பறையறிவிக்கின்றன.

சுந்தரர் தேவாரம் 7.089

(பண்: சீகாமரம்; ராகம்: நாதநாமக்கிரியா)

திருச்சிற்றம்பலம்

1. பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயில்உளா யோஎன்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம்போகீர் என்றானே.

2. இடையறியேன் தலையறியேன் எம்பெருமான் சரணம்என்பேன்
நடையுடையன் நம்மடியான் என்றவற்றைப் பாராதே
விடையுடையான் விடநாகன் வெண்ணீற்றன் புலியின்தோல்
உடையுடையான் எனையுடையான் உளோம்போகீர் என்றானே.

3. செய்வினையொன் றறியாதேன் திருவடியே சரணென்று
பொய்யடியேன் பிழைத்திடினும் பொறுத்திடநீ வேண்டாவோ
பையரவா இங்கிருந்தா யோஎன்னப் பரிந்தென்னை
உய்யஅருள் செய்யவல்லான் உளோம்போகீர் என்றானே.

4. கம்பமரும் கரியுரியன் கறைமிடற்றன் காபாலி
செம்பவளத் திருவுருவன் சேயிழையோ டுடனாகி

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

நம்பியிங்கே இருந்தீரே என்றுநான் கேட்டலுமே
உம்பர்தனித் துணையெனக்கு உளோம்போகீர் என்றானே.

5. பொன்னிலங்கு நறுங்கொன்றை புரிசடை மேற்பொலிந்திலங்க
மின்னிலங்கு நுண்ணிடையாள் பாகமா எருதேறித்
துன்னியிரு பால்அடியார் தொழுதேத்த அடியேனும்
உன்னதமாய்க் கேட்டலுமே உளோம்போகீர் என்றானே.

6. கண்ணுதலால் காமனையும் காய்ந்ததிறல் கங்கைமலர்
தெண்ணிலவு செஞ்சடைமேல் தீமலர்ந்த கொன்றையினான்
கண்மணியை மறைப்பித்தாய் இங்கிருந்தா யோஎன்ன
ஒண்ணுதலி பெருமானார் உளோம்போகீர் என்றானே.

7. பார்நிலவு மறையோரும் பத்தர்களும் பணிசெய்யத்
தார்நிலவு நறுங்கொன்றைச் சடையனார் தாங்கரிய
கார்நிலவு மணிமிடற்றீர் இங்கிருந்தீ ரேஎன்ன
ஊரரவம் அரைக்கசைத்தான் உளோம்போகீர் என்றானே.

8. வாரிடம்கொள் வனமுலையாள் தன்னோடு மயானத்துப்
பாரிடங்கள் பலசூழப் பயின்றாடும் பரமேட்டி
காரிடம்கொள் கண்டத்தன் கருதுமிடம் திருவொற்றி
யூரிடங்கொண் டிருந்தபிரான் உளோம்போகீர் என்றானே.

9. பொன்னவிலும் கொன்றையினாய் போய்மகிழ்க் கீழிருவென்று
சொன்னஎனைக் காணாமே சூளறவு மகிழ்க்கீழே
என்னவல்ல பெருமானே இங்கிருந்தா யோஎன்ன
ஒன்னலரைக் கண்டாற்போல் உளோம்போகீர் என்றானே.

10. மான்திகழும் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாம்
தோன்றஅருள் செய்தளித்தாய் என்றுரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயில் இங்கிருந்தா யோஎன்ன
ஊன்றுவதோர் கோலருளி உளோம்போகீர் என்றானே.

11. ஏராரும் பொழில்நிலவு வெண்பாக்கம் இடம்கொண்ட
காராரும் மிடற்றானைக் காதலித்திட்டு அன்பினொடும்
சீராரும் திருவாரூர்ச் சிவன்பேர்சென் னியில்வைத்த
ஆரூரன் தமிழ்வல்லார்க்கு அடையாவல் வினைதானே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

18. திருக்கள்ளில் (திருக்கண்டலம்)

(சென்னை - பெரியபாளையம், கன்னிகைப்பேரிலிருந்து 2 கி.மீ. தொலைவு; திருவள்ளூர் - செங்குன்றம் (Red Hills) - பெரியபாளையம் பாதை)

ஞானசம்பந்தர் தேவாரம் 1.119
*(பண்: வியாழக்குறிஞ்சி; ராகம்: சௌராஷ்டிரம்)
திருச்சிற்றம்பலம்

1. முள்ளின்மேல் முதுகூகை முரலும் சோலை
வெள்ளின்மேல் விடுகூறைக் கொடி விளைந்த
கள்ளில்மேய அண்ணல் கழல்கள் நாளும்
உள்ளுமேல் உயர்வெய்தல் ஒரு தலையே.

2. ஆடலான் பாடலான் அரவங்கள் பூண்டான்
ஓடலாற் கலனில்லான் உறை பதியால்
காடலாற் கருதாத கள்ளில் மேயான்
பாடெலாம் பெரியார்கள் பரசு வாரே.

3. எண்ணார்மும் மதிலெய்த இமையா முக்கண்
பண்ணார்நான் மறைபாடும் பரம யோகி
கண்ணார் நீறணிமார்பன் கள்ளில் மேயான்
பெண்ணாணாம் பெருமானெம் பிஞ்ஞ கனே.

4. பிறைபெற்ற சடையண்ணல் பெடைவண் டாலும்
நறைபெற்ற விரிகொன்றைத் தார் நயந்த
கறைபெற்ற மிடற்றண்ணல் கள்ளில் மேயான்
நிறைபெற்ற அடியார்கள் நெஞ்சு ளானே.

5. விரையாலும் மலராலும் விழுமை குன்றா
உரையாலும் எதிர்கொள்ள ஊரா ரம்மாக்
கரையார்பொன் புனல்வேலிக் கள்ளில் மேயான்
அரையார்வெண் கோவணத்த அண்ணல் தானே.

6. நலனாய பலிகொள்கை நம்பான் நல்ல
வலனாய மழுவாளும் வேலும் வல்லான்

★ மேற்கண்ட 'முள்ளின்மேல்...' என்ற பதிகத்தின் பண்/ராகத்தைத் தழுவிய 'சந்நிதிமுறை'ப்பதிகத்தின்ஒருபாடல்இப்பதிகஇறுதியில்இணைக்கப்பட்டுள்ளது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

கலனாய தலையோட்டான் கள்ளில் மேயான்
மலனாய தீர்த்தெய்தும் மாதவத் தோர்க்கே.

7. பொடியார்மெய் பூசினும் புறவின் னறவம்
குடியாவூர் திரியினுங் கூப்பி டினுங்
கடியார்பூம் பொழிற்சோலைக் கள்ளில் மேயான்
அடியார்பண் பிகழ்வார்கள் ஆதர் களே.

8. திருநீல மலரொண்கண் தேவி பாகம்
புரிநூலும் திருநீறும் புல்கு மார்பில்
கருநீல மலர்விம்மு கள்ளில் என்றும்
பெருநீல மிடற்றண்ணல் பேணு வதே.

9. வரியாய மலரானும் வையம் தன்னை
உரிதாய அளந்தானும் உள்ளு தற்கங்கு
அரியானும் அரிதாய கள்ளில் மேயான்
பெரியானென் றறிவார்கள் பேசு வாரே.

10. ஆச்சியப் பேய்களோடு அமணர் குண்டர்
பேச்சிவை நெறியல்ல பேணு மின்கள்
மாச்செய்த வளவயல் மல்கு கள்ளில்
தீச்செய்த சடையண்ணல் திருந் தடியே.

11. திகைநான்கும் புகழ்காழிச் செல்வம் மல்கு
பகல்போலும் பேரொளியான் பந்தன் நல்ல
முகைமேவு(ம்) முதிர்சடையான் கள்ளில் ஏத்தப்
புகழோடும் பேரின்பம் புகுதும் அன்றே.

திருச்சிற்றம்பலம்

உயிர்–உண்ணி

தலைப்பு 92 (கலிவிருத்தம்; பண்: வியாழக்குறிஞ்சி; சௌராஷ்டிரம்)

1. தெருளாறு தேறாத சிறுநா யேன்தன்
உருளாயம் ஒக்கும் உயிர்ச் சேஷ்டை ஓய
இருளாறு காணாத ரமணா னந்தப்
பொருளாளன் உண்டதிறம் போற்ற லாமே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

19. திருக்காளத்தி

(திருப்பதியிலிருந்து 40 கி.மீ.; சென்னையிலிருந்து 110 கி.மீ.)

மூலவரின் அடிப்பாகம் சிலந்தி வடிவமும், மத்தியில் யானை தந்தங்களும் மேற்பகுதியில் பாம்பு வடிவமும் கொண்டுள்ளது. 27 நட்சத்திரங்கள் பொறித்த தங்கக் கவசமும் சார்த்தப்படுகிறது. கண்ணப்பர் கண் அப்பிய வடுவும் மூலத் திருமேனியில் உள்ளது. கண்ணப்பரின் பக்தி ஆதிசங்கரரால் சிவானந்த லஹரியில் புகழப்பட்டுள்ளது. சம்பந்தரும் சுந்தரரும் இத்தலத்திலிருந்தே கயிலாயம், கேதாரம் போன்ற தலங்களுக்கான பதிகங்களைப் பாடினர். பாரத்வாஜர் தவம் செய்து பேறுபெற்றதால் அக்கோத்திரக்காரர்களுக்கே பூஜை செய்யும் உரிமை உள்ளது. அம்பாள் ஞானப் பூங்கோதையின் திருவடியில் ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த அர்த்த (ஸ்ரீசக்ர) மேரு உள்ளது. ஆலயத்தின் அருகிலுள்ள கைலாச கிரியை, அருணாசலேஸ்வரர் ஆண்டிற்கு இருமுறை கிரிவலம் வருவது போலவே இங்கும் இறைவனே கிரிவலம் வருகிறார். இதுபோல் எண்ணற்ற சரித்திரங்களும் பெருமையும் எழுத்திலடங்காப் பெருமை பெற்ற தலம் இது.

ஞானசம்பந்தர் தேவாரம் 3.069 (3 பதிகங்கள்)
(பண்: சாதாரி; ராகம்: பந்துவராளி)

திருச்சிற்றம்பலம்

1. வானவர்கள் தானவர்கள் வாதைபட வந்ததொரு மாகடல்விடம்
தானமுது செய்தருள் புரிந்தசிவன் மேவுமலை தன்னைவினவில்
ஏனமிள மானினொடு கிள்ளைதினை கொள்ளஎழி லார்கவணினால்
கானவர்தம் மாமகளிர் கனகமணி விலகுகா ளத்திமலையே.

2. முதுசினவில் அவுணர்புரம் மூன்றுமொரு நொடிவரையின் மூளவெரிசெய்
சதுரர்மதி பொதிசடையர் சங்கரர் விரும்புமலை தன்னைவினவில்
எதிரெதிர வெதிர்பிணைய எழுபொறிகள் சிதறஎழில் ஏனமுழுத
கதிர்மணியின் வளரொளிகள் இருளகல நிலவுகா ளத்திமலையே.

3. வல்லைவரு காளியைவ குத்துவலி யாகிமிகு தாரகனைநீ
கொல்லென விடுத்தருள் புரிந்தசிவன் மேவுமலை கூறிவினவில்
பல்பல இருங்கனி பருங்கிமிக வுண்டவை நெருங்கியினமாய்க்
கல்லதிர நின்றுகரு மந்திவிளை யாடுகா ளத்திமலையே.

4. வேயனைய தோளுமையொர் பாகமது வாகவிடை யேறிசடைமேல்
தூயமதி சூடிசுடு காடில்நட மாடிமலை தன்னைவினவில்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்மல ராகுநயனம்
காய்கணையி னாலிடந்து ஈசனடி கூடுகா ளத்திமலையே.

5. மலையின்மிசை தனில்முகில்போல் வருவதொரு மதகரியை மழைபோலலறக்
கொலைசெய்துமை யஞ்சவுரி போர்த்தசிவன் மேவுமலை கூறிவினவில்
அலைகொள்புனல் அருவிபல சுனைகள்வழி யிழியவயல் நிலவுமுதுவேய்
கலகலென வொளிகொள்கதிர் முத்தமவை சிந்துகா ளத்திமலையே.

6. பாரகம் விளங்கிய பகீரதன் அருந்தவம் முயன்றபணிகண்டு
ஆரருள் புரிந்தலைகொள் கங்கைசடை யேற்றஅரன் மலையைவினவில்
வாரதர் இருங்குறவர் சேவலின் மடுத்தவர் எரித்தவிறகில்
காரகில் இரும்புகை விசும்புகமழ் கின்றகா ளத்திமலையே.

7. ஆருமெதி ராதவலி யாகியச லந்தரனை ஆழியதனால்
ஈரும்வகை செய்தருள் புரிந்தவன் இருந்தமலை தன்னைவினவில்
ஊரும்அர வம்மொளிகொள் மாமணி உமிழ்ந்தவையு லாவிவரலால்
காரிருள் கடிந்துகன கம்மெனவி ளங்குகா ளத்திமலையே.

8. எரியனைய சுரிமயிர் இராவணனை யீடழிய எழில்கொள்விரலாற்
பெரியவரை யூன்றியருள் செய்தசிவன் மேவுமலை பெற்றிவினவில்
வரியசிலை வேடுவர்கள் ஆடவர்கள் நீடுவரை ஊடுவரலால்
கரியினொடு வரியுழுவை அரியினமும் வெருவுகா ளத்திமலையே.

9. இனதளவில் இவனதடி இணையுமுடி யறிதுமென இகலுமிருவர்
தனதுருவம் அறிவரிய சகலசிவன் மேவுமலை தன்னைவினவில்
புனவர்புன மயிலனைய மாதரொடு மைந்தரு மணம்புணரும்நாள்
கனகமென மலர்களணி வேங்கைகள் நிலாவுகா ளத்திமலையே.

10. நின்றுகவ ளம்பலகொள் கையரொடு மெய்யிலிடு போர்வையவரும்
நன்றியறி யாதவகை நின்றசிவன் மேவுமலை நாடிவினவில்
குன்றின்மலி துன்றுபொழில் நின்றகுளிர் சந்தின்முறி தின்றுகுலவிக்
கன்றினொடு சென்றுபிடி நின்றுவிளை யாடுகா ளத்திமலையே.

11. காடதிட மாகநட மாடுசிவன் மேவுகா ளத்திமலையை
மாடமொடு மாளிகைகள் நீடுவளர் கொச்சைவயம் மன்னுதலைவன்
நாடுபல நீடுபுகழ் ஞானசம் பந்தனுரை நல்லதமிழின்
பாடலொடு பாடுமிசை வல்லவர்கள் நல்லர்பர லோகமெளிதே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பர் திருத்தாண்டகம் 6.008 (ராகம்: ஹரிகாம்போதி)

திருச்சிற்றம்பலம்

1. விற்றூண்ஒன் றில்லாத நல்கூர்ந் தான்காண்
 வியன்கச்சிக் கம்பன்காண் பிச்சை யல்லால்
மற்றூண்ஒன் றில்லாத மாசது ரன்காண்
 மயானத்து மைந்தன்காண் மாசொன் றில்லாப்
பொற்றூண்காண் மாமணிநற் குன்றொப் பான்காண்
 பொய்யாது பொழில்ஏழும் தாங்கி நின்ற
கற்றூண்காண் காளத்தி காணப் பட்ட
 கணநாதன்காண் அவன்என் கண்ணு ளானே.

2. இடிப்பான்காண் என்வினையை ஏகம் பன்காண்
 எலும்பு ஆபரணன்காண் எல்லாம் முன்னே
முடிப்பான்காண் மூவுலகு மாயி னான்காண்
 முறைமையால் ஐம்புரியும் வழுவா வண்ணம்
படித்தான் தலையறுத்த பாசு பதன்காண்
 பராய்த்துறையான் பழனம்பைஞ் ஞீலி யான்காண்
கடித்தார் கமழ்கொன்றைக் கண்ணி யான்காண்
 காளத்தி யான்அவன்என் கண்ணு ளானே.

3. நாரணன்காண் நான்முகன்காண் நால்வே தன்காண்
 ஞானப் பெருங்கடற்கோர் நாவாய் அன்ன
பூரணன்காண் புண்ணியன்காண் புராணன் தான்காண்
 புரிசடைமேல் புனலேற்ற புனிதன் தான்காண்
சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன் தான்காண்
 தன்மைக்கண் தானேகாண் தக்கோர்க்கு எல்லாம்
காரணன்காண் காளத்தி காணப் பட்ட
 கணநாதன்காண் அவன்என் கண்ணு ளானே.

4. செற்றான்காண் என்வினையைத் தீயாடி காண்
 திருவொற்றி யூரான்காண் சிந்தை செய்வார்க்கு
உற்றான்காண் ஏகம்பம் மேவி னான்காண்
 உமையாள்நற் கொழுநன்காண் இமையோர் ஏத்தும்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொற்றான்காண் சோற்றுத் துறையு ளான்காண்
சுறாவேந்தன் ஏவலத்தை நீறா நோக்கக்
கற்றான்காண் காளத்தி காணப் பட்ட
கணநாதன்காண் அவன்என் கண்ணு ளானே.

5. மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்
வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டத்து அப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றி னுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத்து உச்சி யுள்ளான்
காளத்தி யான்அவன்என் கண்ணு ளானே.

6. எல்லாம்முன் தோன்றாமே தோன்றி னான்காண்
ஏகம்ப மேயான்காண் இமையோர் ஏத்தப்
பொல்லாப் புலனைந்தும் போக்கி னான்காண்
புரிசடைமேற் பாய்கங்கை பூரித் தான்காண்
நல்லவிடை மேல்கொண்டு நாகம் பூண்டு
நளிர்சிரமொன்று ஏந்திஓர் நாணாய் அற்ற
கல்லாடை மேல்கொண்ட காபா லிகாண்
காளத்தி யான்அவன்என் கண்ணு ளானே.

7. கரியுருவு கண்டத்துஎம் கண்ணு ளான்காண்
கண்டன்காண் வண்டுண்ட கொன்றை யான்காண்
எரிபவள வண்ணன்காண் ஏகம் பன்காண்
எண்திசையும் தானாய குணத்தி னான்காண்
திரிபுரங்கள் தீயிட்ட தீயா டிகாண்
தீவினைகள் தீர்த்திடும்என் சிந்தை யான்காண்
கரியுரிவை போர்த்துஉகந்த காபா லிகாண்
காளத்தி யான்அவன்என் கண்ணு ளானே.

8. இல்லாடிச் சில்பலிசென்று ஏற்கின் றான்காண்
இமையவர்கள் தொழுதிறைஞ்ச இருக்கின் றான்காண்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வில்லாடி வேடனாய் ஓடி னான்காண்
வெண்ணூலும் சேர்ந்த அகலத் தான்காண்
மல்லாடு திரள்தோள்மேல் மழுவா ளன்காண்
மலைமகள்தன் மணாளன்காண் மகிழ்ந்து முன்னாள்
கல்லாலின் கீழிருந்த காபா லிகான்
காளத்தி யான்அவன்என் கண்ணு ளானே.

9. தேனப்பூ வண்டுஉண்ட கொன்றை யான்காண்
திருஏகம் பத்தான்காண் தேனார்ந் துக்க
ஞானப்பூங் கோதையாள் பாகத் தான்காண்
நம்பன்காண் ஞானத்து ஒளியா னான்காண்
வானப்பே ரூரும் அறிய வோடி
மட்டித்து நின்றான்காண் வண்டார் சோலைக்
கானப்பே ரூரான்காண் கறைக்கண் டன்காண்
காளத்தி யான்அவன்என் கண்ணு ளானே.

10. இறையவன்காண் ஏழுலகும் ஆயி னான்காண்
ஏழ்கடலும் சூழ்மலையும் ஆயி னான்காண்
குறையுடையார் குற்றேவல் கொள்வான் தான்காண்
குடமூக்கில் கீழ்க்கோட்டம் மேவி னான்காண்
மறையுடைய வானோர் பெருமான் தான்காண்
மறைக்காட் டுறையும் மணிகண் டன்காண்
கறையுடைய கண்டத்துஎம் காபா லிகாண்
காளத்தி யான்அவன்என் கண்ணு ளானே.

11. உண்ணா வருநஞ்சம் உண்டான் தான்காண்
ஊழித்தீ யன்னான்காண் உகப்பார் காணப்
பண்ணாரப் பல்லியம் பாடி னான்காண்
பயின்றநால் வேதத்தின் பண்பி னான்காண்
அண்ணா மலையான்காண் அடியார் ஈட்டம்
அடியிணைகள் தொழுதேத்த அருளு வான்காண்
கண்ணாரக் காண்பார்க்குஓர் காட்சி யான்காண்
காளத்தி யான்அவன்என் கண்ணு ளானே.

திருச்சிற்றம்பலம்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுந்தரர் தேவாரம் 7.026
(பண்: நட்டராகம்; ராகம்: பந்துவராளி)

திருச்சிற்றம்பலம்

1. செண்டா டும்விடையாய் சிவனேயென் செழுஞ்சுடரே
வண்டா ரும்குழலாள் உமைபாக(ம்) மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்கும் கணநாதனெம் காளத்தியாய்
அண்டா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.

2. இமையோர் நாயகனே இறைவாஎன் இடர்த்துணையே
கமையார் கருணையினாய் கருமாமுகில் போல்மிடற்றாய்
உமையோர் கூறுடையாய் உருவேதிருக் காளத்தியுள்
அமைவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.

3. படையார் வெண்மழுவா பகலோன்பல் உகுத்தவனே
விடையார் வேதியனே விளங்கும்குழைக் காதுடையாய்
கடையார் மாளிகைசூழ் கணநாதனெம் காளத்தியாய்
உடையாய் உன்னையல்லால் உகந்தேத்த மாட்டேனே.

4. மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவேஉன்குற் றேவல்செய்வேன்
நெறியே நின்றடியார் நினைக்கும்திருக் காளத்தியுள்
அறிவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.

5. செஞ்சே லன்னகண்ணார் திறத்தேகிடந் துற்றலறி
நஞ்சேன் நானடியேன் நலமொன்றறி யாமையினால்
துஞ்சேன் நானொருகால் தொழுதேன்திருக் காளத்தியாய்
அஞ்சா துன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.

6. பொய்யவன் நாயடியேன் புகவேநெறி ஒன்றறியேன்
செய்யவ னாகிவந்திங்கு இடரானவை தீர்த்தவனே
மெய்யவ னேதிருவே விளங்கும்திருக் காளத்தியென்
ஐயநுன் தன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.

7. கடியேன் காதன்மையாற் கழற்போதறி யாதஎன்னுள்
குடியாக் கோயில்கொண்ட குளிர்வார்சடை எம்குழகா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடியால் வானவர்கள் முயங்கும்திருக் காளத்தியாய்
அடியேன் உன்னையல்லால் அறியேன்மற் றொருவரையே.

8. நீறார் மேனியனே நிமலாநினை யன்றிமற்றுக்
கூறேன் நாவதனால் கொழுந்தேஎன் குணக்கடலே
பாறார் வெண்தலையில் பலிகொண்டுழல் காளத்தியாய்
ஏறே உன்னையல்லால் இனிஏத்த மாட்டேனே.

9. தளிர்போல் மெல்லடியாள் தனைஆகத் தமர்ந்தருளி
எளிவாய் வந்தென்னுள்ளம் புகுதவல்ல எம்பெருமான்
களியார் வண்டறையும் திருக்காளத்தி உள்ளிருந்த
ஒளியே உன்னையல்லால் இனியொன்றும் உணரேனே.

10. காரா ரும்பொழில்சூழ் கணநாதனெம் காளத்தியுள்
ஆரா இன்னமுதை அணிநாவலா ரூரன்சொன்ன
சீரூர் செந்தமிழ்கள் செப்புவார்வினை யாயினபோய்ப்
பேரா விண்ணுலகம் பெறுவார்பிழைப் பொன்றிலரே.

திருச்சிற்றம்பலம்

திருவொற்றியூர் விநாயகர்: ஆதிபுரீஸ்வரர் ஆலயப் பின்புறமுள்ள இச்சிறு ஆலயத்தில், காவ்யகண்ட கணபதி முனிவருக்கு, பகவான் ரமண மஹரிஷி (ஏறத்தாழ 1910-ஆம் வருடம்), காட்சியளித்த நிகழ்ச்சியினை அவ்விருவரது வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

20. திருவொற்றியூர்
(சென்னையின் ஒரு பகுதி)

அரசன் ஒருவன் எல்லா ஊர்களுக்கும் வரி விதித்தபொழுது, யாவரும் அறியாதபடி, "இவ்வாணை ஒற்றியூர் நீங்கலாகக் கொள்க" என்று அவ்வோலையில் எழுதப்பட்டிருந்ததை வியந்து, ஒற்றியூர் (விலக்கு அளிக்கப்பட்ட ஊர்) என்றும், இறைவன் திருநாமம் "எழுத்தறியும் பெருமான்" என்றும் பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

ஒரே நாளில் ஒற்றியூர், திருவேற்காடு, திருவலிதாயம் (பாடி) அம்மன் தரிசனம் சிறப்பு. கலிய நாயனார் அவதாரத் தலம், பட்டினத்தார் முக்தி ஸ்தலம். சுந்தரர் சங்கிலியாரை மணந்தது. ஐயடிகள் காடவர்கோன், முசுகுந்த சக்கரவர்த்தி வழிபட்டது. மாசிமாதம் விழா. கார்த்திகை-பௌர்ணமி முதல் மூன்று நாட்கள் மட்டும் மூலவருக்குக் கவசம் நீக்கப்பட்டு தரிசனம். மேலும் பற்பல சிறப்புகள் கொண்ட தெய்வீகத் திருத்தலம்.

ஞானசம்பந்தர் தேவாரம் 3.057
(பண்: பஞ்சமம்; ராகம்: ஆகிரி)

திருச்சிற்றம்பலம்

1. விடையவன் விண்ணு(ம்)மண்ணும் தொழநின்றவன் வெண்மழுவாள்
படையவன் பாய்புலித்தோல் உடைகோவணம் பல்கரந்தைச்
சடையவன் சாமவேதன் சசிதங்கிய சங்கவெண்தோடு
உடையவன் ஊனமில்லி உறையும்இடம் ஒற்றியூரே.

2. பாரிடம் பாணிசெய்யப் பறைக்கன்செறு பல்கணப்பேய்
சீரொடும் பாடலாடல் இலயஞ்சிதை யாதகொள்கைத்
தாரிடும் போர்விடையன் தலைவன்தலை யேகலனா
ஊரிடும் பிச்சைகொள்வான் உறையும்இடம் ஒற்றியூரே.

3. விளிதரு(ம்) நீருமண்ணும் விசும்போடுஅனல் காலுமாகி
அளிதரு(ம்) பேரருளான் அரனாகிய ஆதிமூர்த்தி
களிதரு(ம்) வண்டுபண்செய் கமழ்கொன்றையினோடு அணிந்த
ஒளிதரு(ம்) வெண்பிறையான் உறையும்இடம் ஒற்றியூரே.

4. அரவமே கச்சதுஆக அசைத்தான்அலர்க் கொன்றையந்தார்
விரவிவெண் ணூல்கிடந்த விரையார்வரை மார்பன்எந்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரவுவார் பாவமெல்லாம் பறைத்துப்படர் புன்சடைமேல்
உரவுநீ ரேற்றபெம்மான் உறையும்இடம் ஒற்றியூரே.

5. விலகினார் வெய்யபாவம் விதியாலருள் செய்துநல்ல
பலகினார் மொந்தைதாளந் தகுணிச்சமும் பாணியாலே
அலகினால் வீசிநீர்கொண்டு அடிமேல்அல ரிட்டுமுட்டாது
உலகினார் ஏத்தநின்றான் உறையும்இடம் ஒற்றியூரே.

6. கமையொடு நின்றசீரான் கழலும்சிலம் பும்ஒலிப்பச்
சுமையொடு மேலும்வைத்தான் விரிகொன்றையும் சோமனையும்
அமையொடு நீண்டதிண்தோள் அழகாயபொன் தோடிலங்க
உமையொடும் கூடிநின்றான் உறையும்இடம் ஒற்றியூரே.

7. நன்றியால் வாழ்வதுஉள்ளம் உலகுக்கொரு நன்மையாலே
கன்றினார் மும்மதிலும் கருமால்வரை யேசிலையாப்
பொன்றினார் வார்சுடலைப் பொடிநீறணிந்து ஆரழல்அம்பு
ஒன்றினால் எய்தபெம்மான் உறையும்இடம் ஒற்றியூரே.

8. பெற்றியால் பித்தன்ஒப்பான் பெருமான்கரு மான்உரிதோல்
சுற்றியான் சுத்திசூலம் சுடர்க்கண்ணுதல் மேல்விளங்கத்
தெற்றியால் செற்றுஅரக்கன் உடலைச்செழு மால்வரைக்கீழ்
ஒற்றியான் முற்றும்ஆள்வான் உறையும்இடம் ஒற்றியூரே.

9. திருவினார் போதினானும் திருமாலும்ஓர் தெய்வம்உன்னித்
தெரிவினால் காணமாட்டார் திகழ்சேவடி சிந்தைசெய்து
பரவினார் பாவமெல்லாம் பறையப்படர் பேரொளியோடு
ஒருவனாய் நின்றபெம்மான் உறையும்இடம் ஒற்றியூரே.

10. தோகையம் பீலிகொள்வார் துவர்க்கூறைகள் போர்த்துஉழல்வார்
ஆகம செல்வனாரை அலர்தூற்றுதல் காரணமாக்
கூகையம் மாக்கள்சொல்லைக் குறிக்கொள்ளன்மின் ஏழுலகும்
ஓகைதந்து ஆளவல்லான் உறையும்இடம் ஒற்றியூரே.

11. ஒண்பிறை மல்குசென்னி இறைவன்உறை ஒற்றியூரைச்
சண்பையர் தம்தலைவன் தமிழ்ஞானசம் பந்தன்சொன்ன
பண்புனை பாடல்பத்தும் பரவிப்பணிந் தேத்தவல்லார்
விண்புனை மேல்உலகம் விருப்பெய்துவர் வீடெளிதே.

திருச்சிற்றம்பலம்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பர் தேவாரம் 4.045 (4 பதிகங்கள்)
(பண்: கொல்லி; ராகம்: நவரோஸ்)

திருச்சிற்றம்பலம்

1. வெள்ளத்தைச் சடையில் வைத்த வேதகீ தன்றன் பாதம்
மெள்ளத்தான் அடைய வேண்டின் மெய்தரு ஞானத் தீயால்
கள்ளத்தைக் கழிய நின்றார் காயத்துக் கலந்து நின்று
உள்ளத்துள் ஒளியும் ஆகும் ஒற்றியூர் உடைய கோவே.

2. வசிப்பெனும் வாழ்க்கை வேண்டா வானவர் இறைவன் நின்று
புசிப்பதோர் பொள்ளல் ஆக்கை அதனொடும் புணர்வு வேண்டில்
அசிர்ப்பெனும் அருந்த வத்தால் ஆன்மாவி னிடம் அதாகி
உசிர்ப்பெனும் உணர்வு முள்ளார் ஒற்றியூர் உடைய கோவே.

3. தானத்தைச் செய்து வாழ்வான் சலத்துளே அழுந்து கின்றீர்
வானத்தை வணங்க வேண்டில் வம்மின்கள் வல்லீ ராகில்
ஞானத்தை விளக்கை ஏற்றி நாடியுள் விரவ வல்லார்
ஊனத்தை ஒழிப்பர் போலும் ஒற்றியூர் உடைய கோவே.

4. காமத்துள் அழுந்தி நின்று கண்டரால் ஒறுப்புண் ணாதே
சாமத்து வேத மாகி நின்றதோர் சயம்பு தன்னை
ஏமத்தும் இடையி ராவும் ஏகாந்தம் இயம்பு வார்க்கு
ஓமத்துள் ஒளிய தாகும் ஒற்றியூர் உடைய கோவே.

5. சமையமே லாறு மாகித் தான்ஒரு சயம்பு வாகி
இமையவர் பரவி யேத்த இனிதினங் கிருந்த ஈசன்
கமையினை யுடைய ராகிக் கழலடி பரவு வார்க்கு
உமையொரு பாகர் போலும் ஒற்றியூர் உடைய கோவே.

6. ஒருத்திதன் தலைச்சென் றாளைக் கரந்திட்டான் உலகம் ஏத்த
ஒருத்திக்கு நல்ல னாகி மறுப்படுத்து ஒளித்து மீண்டே
ஒருத்தியைப் பாகம் வைத்தான் உணர்வினால் ஐயம் உண்ணி
ஒருத்திக்கு நல்லன் அல்லன் ஒற்றியூர் உடைய கோவே.

7. பிணமுடை உடலுக் காகப் பித்தராய்த் திரிந்து நீங்கள்
புணர்வெனும் போகம் வேண்டா போக்கலாம் பொய்யை நீங்க
நிணமுடை நெஞ்சின் உள்ளால் நினைக்குமா நினைக்கின் றார்க்கு
உணர்வினோடு இருப்பர் போலும் ஒற்றியூர் உடைய கோவே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. பின்னுவார் சடையான் தன்னைப் பிதற்றிலாப் பேதை மார்கள்
துன்னுவார் நரகம் தன்னுள் தொல்வினை தீர வேண்டின்
மன்னுவான் மறைகள் ஓதி மனத்தினுள் விளக்கொன்று ஏற்றி
உன்னுவார் உள்ளத்து உள்ளார் ஒற்றியூர் உடைய கோவே.

9. முள்குவார் போகம் வேண்டின் முயற்றியால் இடர்கள் வந்தால்
எள்குவார் எள்கி நின்றங்கு இதுவொரு மாயம் என்பார்
பள்குவார் பத்த ராகிப் பாடியும் ஆடி நின்று
உள்குவார் உள்ளத்து உள்ளார் ஒற்றியூர் உடைய கோவே.

10. வெறுத்துகப் புலன்க ளைந்தும் வேண்டிற்று வேண்டு நெஞ்சே
மறுத்துக ஆர்வச் செற்றக் குரோதங்க ளான மாயப்
பொறுத்துகப் புட்ப கத்தேர் உடையானை அடர வூன்றி
ஒறுத்துகந்து அருள்கள் செய்தார் ஒற்றியூர் உடைய கோவே.

திருச்சிற்றம்பலம்

சுந்தரர் தேவாரம் 7.054

(பண்: தக்கேசி; ராகம்: காம்போதி)

திருச்சிற்றம்பலம்

1. அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்பன் ஆகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்க(ண்)ணுக்கு ஒருமருந்து உரையாய்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே.

2. கட்ட னேன்பிறந் தேன்உனக் காளாய்
காதல் சங்கிலி காரண மாக
எட்டி னால்திக ழும்திரு மூர்த்தி
என்செய் வான்அடி யேன்எடுத்து உரைக்கேன்
பெட்டன் ஆகிலும் திருவடிப் பிழையேன்
பிழைப்பன் ஆகிலும் திருவடிக்கு அடிமை
ஒட்டி னேன்எனை நீசெய்வது எல்லாம்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. கங்கை தங்கிய சடையுடைக் கரும்பே
கட்டி யேபலர்க் கும்களை கண்ணே
அங்கை நெல்லியின் பழத்திடை அமுதே
அத்தா என்னிடர் ஆர்க்குஎடுத் துஉரைக்கேன்
சங்கும் இப்பியும் சலஞ்சலம் முரல
வயிரம் முத்தொடு பொன்மணி வரன்றி
ஒங்கு மாகடல் ஓதம்வந் துலவும்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே.

4. ஈன்று கொண்டதோர் சுற்றம்ஒன்று அன்றால்
யாவ ராகிலென் அன்புடை யார்கள்
தோன்ற நின்றருள் செய்துஅளித் திட்டால்
சொல்லு வாரைஅல் லாதன சொல்லாய்
மூன்று கண்உடை யாய்அடி யேன்கண்
கொள்வ தேகணக் குவழக் காகில்
ஊன்று கோல்எனக்கு ஆவதொன் றருளாய்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே.

5. வழித்த லைப்படு வான்முயல் கின்றேன்
உன்னைப் போல்என்னைப் பாவிக்க மாட்டேன்
சுழித்த லைப்பட்ட நீரது போலச்
சுழல்கின் றேன்சுழல் கின்றதுஎன் உள்ளம்
கழித்த லைப்பட்ட நாயது போல
ஒருவன் கோல்பற்றிக் கறகற இழுக்கை
ஒழித்து நீயருள் ஆயின செய்யாய்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே.

6. மானை நோக்கியர் கண்வலைப் பட்டு
வருந்தி யான்உற்ற வல்வினைக்கு அஞ்சித்
தேனை ஆடிய கொன்றையி னாய்உன்
சீல மும்குண மும்சிந்தி யாதே
நானும் இத்தனை வேண்டுவ தடியேன்
உயிரொ டும்நர கத்துஅழுந் தாமை
ஊனம் உள்ளன தீர்த்தருள் செய்யாய்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. மற்றுத் தேவரை நினைந்துனை மறவேன்
எஞ்சி னாரொடு வாழவும் மாட்டேன்
பெற்றி ருந்து பெறாதுஒழி கின்ற
பேதை யேன்பிழைத் திட்டதை அறியேன்
முற்றும் நீஎனை முனிந்திட அடியேன்
கடவது என்உனை நான்மற வேனேல்
உற்ற நோய்உறு பிணிதவிர்த்து அருளாய்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே.

8. கூடினாய் மலை மங்கையை நினையாய்
கங்கை ஆயிர(ம்) முகம்உடை யாளைச்
சூடி னாய்என்று சொல்லிய புக்கால்
தொழும்ப னேனுக்கும் சொல்லலும் ஆமே
வாடி நீயிருந்து என்செய்தி மனமே
வருந்தி யான்உற்ற வல்வினைக் கஞ்சி
ஊடி னால்இனி ஆவதுஒன் றுண்டே
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே.

9. மகத்தில் புக்கதோர் சனிஎனக்கு ஆனாய்
மைந்த னேமணி யேமண வாளா
அகத்தில் பெண்டுகள் நான்ஒன்று சொன்னால்
அழையல் போகுரு டாஎனத் தரியேன்
முகத்திற் கண்ணிழந்து எங்ஙனம் வாழ்கேன்
முக்க ணாமுறை யோமறை ஓதீ
உகைக்கும் தண்கடல் ஓதம்வந் துலவும்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே.

10. ஓதம் வந்துல வும்கரை தன்மேல்
ஒற்றி யூர்உறை செல்வனை நாளும்
ஞாலம் தான்பர வப்படு கின்ற
நான்ம றையங்கம் ஓதிய நாவன்
சீலம் தான்பெரி தும்மிக வல்ல
சிறுவன் வன்தொண்டன் ஊரன் உரைத்த
பாடல் பத்திவை வல்லவர் தாம்போய்ப்
பரகதி திண்ணம் நண்ணுவர் தாமே.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அருள்மிகு காளஹஸ்தீஸ்வரர் திருக்கோயில், ஸ்ரீகாளஹஸ்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொண்டை நாட்டுத் தலங்கள்

பாகம் - 1 (20 தலங்கள்)

காஞ்சிபுரம் முதல் ஒற்றியூர்வரை



அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர்